T/200/0457

0457

முத்துக்குமாரகவிராசர்

# பிரபந்தத்திரட்டு

கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை

தொகுத்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T 200/04

முத்துக்குமாரகவிராசர்

# பிரபந்தத்திரட்டு

இறந்தநூற்ருண்டு

ஞாபகப் பதிப்பு

சுன்னுகம்

கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை B. A.

தொகுத்தது

புலவரகம்

மயிலணி :: சுன்னுகம்

1952.

பதிப்புரிமை]

[விலை ரூபா 1—00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவரக வெளியீடு—6

முதற் பதிப்பு 1952

சைவப்பிரகாச யந்திரசாலை
வண்ணார்பண்ணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

முத்தகச் செய்யுள் பாடுவதில் வித்தகராகிய வரகவி முத்துக்குமார கவிராசர் அவர்கள் (1780—1851) இறந்து நூறு வருடங்களாகி விட்டன. அவரியற்றிய நூல்கள் இப்போதும் யாவராலும் விரும்பிப் படிக்கப்பட்டு வருகின்றன. நண்பர்கள் சிலர் அவற்றை எல்லாம் ஒன்ருகத் திரட்டி வெளியிடுமாறு விரும்புகின்றனர். அவர்களுடைய விருப்பத்துக் கிணங்கி கவிராசரியற்றிய நூல்களை எல்லாந் திரட்டி "முத்துக்குமார கவிராசர் பிரபந்தத்திரட்டு" என்னும் பெயரோடு கவிரராசருடைய இறந்த நூற்ருண்டு ஞாபகவெளியீடாக வெளிப்படுத்துகின்ரும். தமிழுலகம் இதனை உவந்து ஏற்றுக்கொள்ளும் என்பது எமது துணிபு.

சுன்னுகம்,
நந்தன ஞூ வைகாசிமீ } கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்துக்குமாரகவிராசர் வமிசாவலி

நாகநாதபிள்ளை
|
சந்திரசேகரப்பிள்ளை
|
சுப்பிரமணியபிள்ளை
|
அம்பலவாணபிள்ளை

- முத்துக்குமார கவிராசர் **(1780—1851)**
  கதிராசியம்மையார்
  - வள்ளியம்மை
  - யோகம்மா
    சண்முகர்பிள்ளை
  - சின்னம்மா
    செவ்வந்திநாதர்
  - பொன்னம்மா
- சின்னத்தம்பிப்பிள்ளை **(1785—1845)**
  - அம்பலவாணபிள்ளை (1803-1886
    சிதம்பரவம்மையார்
    - குமாரசுவாமிப் புலவர் (1855—1922)
  - இராமுப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்துக்குமாரகவிராசர் வரலாறு

முத்துக்குமார கவிராசர் யாழ்ப்பாணத்து உடுவிற் பதியில் வசித்த சைவ வேளாண் குலத்தினராகிய நாக நாதபிள்ளை மரபிலே சிவபக்தி அடியார்பக்திகளிற் சிறந்த அம்பலவாணபிள்ளைக்குப் புத்திரராகச் சுன்னு கத்து மயிலணியில் 1780-ம் ஆண்டு பிறந்தார். இவ ருடைய தம்பியாரே குமாரசுவாமிப்புலவரின் தாதை தன் தாதையாகிய சின்னத்தம்பிப்பிள்ளையாவர்.

கவிராசர் தமது இளமைப் பருவத்தில் யாரிடம் கல்விகற்ருர் என்பது நன்கு புலப்படவில்லை. இவர் தமிழிலக்கண லக்கியங்களை நன்கு கற்றவர் என்பது இவரியற்றிய நூல்களால் அறியப்படும். கல்வியிற்சிறந் தோர் இவருடைய கவித்திறமையை நோக்கி இவரைக் 'கவிராசர்' என்றும் 'வரகவி' என்றும் அழைத்தனர்.

இவருடைய மாணுக்கருள் தலைசிறந்தவர் ஆங்கில திராவிட பண்டிதராக விளங்கிய சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்கள். பிள்ளையவர்கள் தாம் பதிப்பித்த நூல்களில் கவிராசருக்குக் குருவணக்கங் கூறியிருக்கின் றனர்.

முதலில் இவர் வண்ணுர்பண்ணையைச் சார்ந்த நீராவியடியில் வசித்த இரகுநாதச் சிறுப்பர் சந்ததியி லுள்ள ஒரு பெண்ணை விவாகஞ் செய்தனர் என்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவி இறந்தபின்னர் சுன்னாகத்தில் கதிராசியம்மையார் என்னும் பெண்மணியை விவாகஞ் செய்து வள்ளியம்மை, யோகம்மா, சின்னம்மா, பொன்னம்மா என்னும் மூன்று புத்திரிகளைப் பெற்றனர். இவர்களது சந்ததியிலுள்ளவர்கள் இப்போது பல சிறப்புக்களோடு வாழுகின்றனர்.

கவிராசர் இயற்றிய நூல்கள் ஞானக்கும்மி,யேசுமத பரிகாரம், ஐயனார் ஊஞ்சல், நடராசர்பதிகம், தனிச் செய்யுட்கள் என்பன. ஞானக்கும்மி, யேசுமதபரிகாரம், என்னும் இரு நூல்களும் கிறீஸ்துமதக் கொள்கைகளைக் கண்டித்து முறையே கும்மிச் சந்தங்களாலும் ஆசிரிய விருத்தங்களாலும் இயற்றப்பெற்றன. ஐயனார் ஊஞ்சல் சுன்னாகத்திற் கோயில்கொண்டெழுந்தருளி யிருக்கும் ஐயனார் மேலது. நடராசர்பதிகம் கிடைக்கவில்லை. தனிப்பாக்கள் தோத்திர ரூபமாக யாழ்ப்பாணத்திலுள்ள பல தலங்கள்மீது இயற்றப் பெற்றன. தனிச் செய்யுட்களைத் திரட்டி "முத்தகபஞ்சவிஞ்சதி" என்னும் பெயரோடு 1907-ம் ஆண்டு குமாரசுவாமிப் புலவரால் வெளியிடப்பட்டது. சுன்னாகத்தைப்பற்றிய தனிச்செய்யுள் ஒன்று புதிதாக இவருடைய பிரபந்தத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. பாக்கள் எல்லாம் சொல்லும் பொருளும் சுவைபட நல்லிசையோடு கூடிப் படிப்பவர் மனத்தை மகிழ்விக்கும் தன்மையுடையன. மடக்கலங்காரம், நாமாந்தரிதை, சங்கியாதை, வியுற்கிராந்தை முதலிய பல அணிகள் இவருடைய பாடல்களில் நூதனமாக அமைத்துப் பாடப்பட்டிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபல வித்துவானாகிய சேனாதிராய முதலியாரும் கவிராசரும் நெருங்கிய நண்பர்களா யிருந்தனர். மாவிட்ட புரம் கோயில் உற்சவங்களுக்கு இருவரும் அடிக்கடி போகும் வழக்குடையர். கோயிலில் வேடிக்கையான காட்சிகளைக் காணும்போது இருவரும் சேர்ந்து பாக்கள் இயற்றியிருக்கின்றனர்.

இத்தகைய அருமை பெருமை வாய்ந்த கவிராச ரவர்கள் தமது எழுபத்தொராவது வயசில் (1851-ம் ஆண்டில்) இவ்வுலக வாழ்வை நீத்து பரலோகவாழ்வை எய்தினர்.

## முத்துக்குமார கவிராசர் புகழ்மாலை

முத்துக் குமார கவிராச சேகரன் மொய்யமரில்
தத்தித் தடக்குண்டு நாவலர் தாவச் சவிமடிந்து
சித்தங் கெடவுட ருமொத ரேந்த்ரன் சிதைத்தபையிள்
செத்துக் கிடக்குது பார்சிவ சங்கரன் றெம்முனைக்கே.

(மதுரை வித்துவான் : சபாபதி முதலியார்)

## ஆசிரிய வணக்கம்

தெள்ளுதமிழ்க் கடல்கடந்து செழியகலைத்
துறைபடிந்து திரிபின் ஞானக்
கொள்ளை கொண்டு நுகர்ந்தமுத்துக் குமாரகவி
மேகமிதைக் கொடிச் சுன்னுக

வள்ளலென துள்ளமதி கொள்ளநறை
விள்ளுந்தமிழ் மணஞ் சற்றேறி
வெள்ளறிவின் முடைநாற்றம் வீவித்தான்
விரைமலர்த்தாள் மிலைவன் மாதோ.

(சூளாமணிப் பதிப்பு: சி. வை. தாமோதரம்பிள்ளை)

எழுத்தொடு விழுத்தமிழ் பழுத்தசெந் நாவினன்
முழுத்தகை யேற்கவை யழுத்தியோன் சுன்னு
கத்துயர் மரபினோன் முத்துக்கு மார
வித்தக னடிதலை வைத்துவாழ்த் துவனே.

(வீரசோழியப் பதிப்புரை. சி. வை. தா.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௳

முத்துக்குமார கவிராசர்

# பிரபந்தத் திரட்டு

## தனிக் கவிகள்

### 1. விநாயக வணக்கம்

இது சுன்னாகத்துச் சந்திரசேகர விநாயகக் கடவுண்மீது வணக்கமாக வழிபெதுகை அமைத்துப் பாடிய கட்டளைக்கலித்துறை.

வாட்டானை யன்னமை தீட்டா விழிமிளிர் மான்மகளைத்
தாட்டானையானுக்குவேட்டானையன்பர்தஞ்சஞ்சலங்கள்
மீட்டானை யென்கவி கேட்டானைச் சுன்னையின் மேவுநரை
மாட்டா னருளொரு கோட்டானை நாளும் வணங்குவனே.

வாட்டானை - வாட்படை. தாட்டானையான் - முருகக் கடவுள். தாட்டானை - கோழி. தாள் - கால் தானை - ஆயுதம். வேட்டான் - வேட்பித்தோன். நரைமாட்டான் - சிவன். நரை - வெள்ளை.

2

எற்பகத் தேயெழ வற்பக லோய்வுற வின்றிவைகும்
பொற்பகத் திற்குப் பொருடேடி யேயுழல் புந்தியுள்ளீர்
வெற்பகத் தேவயி லோன்முன் வருஞ்சுன்னை வேழமுகக்
கற்பகத் துக்கன்பா வீர்தருங் கற்ப கவளமுமே.

---

குறிப்புரை: அ. த. புலவரால் எழுதப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3

கோலநீலக்கரிய தூலகூ லப்பகடு
கூட்டியேர்ப் பூட்டியுழுநர்
கோனீட்டி யளவான சால்காட்டி யுழவிடறு
குடவளை முழங்கவிந்த்ர
சாலமா மெனவாளை மேலெழா விண்ணோங்கு
தாழையின் பாளையிடறுந்
தண்பணைச் சுன்னாக நண்பனே! கலைஞான
தற்பரா பாதநமவே!
சீலமா ரன்பரநு கூலகீ லாலமதி
சேகரா! வேகஞான
சீதமா ருதம்வீசு காலமே லானபர
சிவவா தாரமுதல்வா!
காலமே லானபர மூலகா ரணமான
கணபதீ!கரு ணாநிதீ!
கப்பனுக் கருளுமோர் கொம்பநம் பர்க்கினிய
கம்பகும் பத்தும்பியே!

## 4. முறையீடு

இது யாழ்ப்பாண நகரிலிருந்து காங்கேயன் துறைக்குச் செல்லும் நெடுந் தெருவின் பக்கத்திலே காணி வைத்திருப்பவர் யாவரும் தத்தம் நிலங்களைச் சேர்ந்த தெருப்பாகங்களைக் கற்களிட்டுச் செப்பமுறக் கட்டிவிடல் வேண்டும் என்று அப்பொழுதை யரசினர் கட்டளையிட்டபோது மனம் நொந்து சுன்னாகத்துச் சந்திரசேகர விநாயக மூர்த்திமீது முறையீடு செய்த கட்டளைக் கலித்துறை.

மருக்கட்டு மாலை முடிமன்னர்
கட்டளை வந்தபடி
தெருக்கட்டட் டாம்கன் மலைப்பாரை
ஒப்பனை செய்தடித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நருக்கட்டு மாமறுத் தாற்குற்ற
மாக்கினை நம்பிக்கையென்(று)
இருக்கட்டு மாமிதற கென்செய்கு
வேன்சுன்னை ஏரம்பனே.

## 5. சிதம்பர நடராசர் தோத்திரம்

இவை மூன்றும் சிதம்பர நடராஜமூர்த்திமீது தோத்திரரூபமாகப் பாடிய ஆசிரியவிருத்தம். வழியெதுகையும் மடக்கலங்காரமும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

நன்மைசெய் தறிகிலேன், தன்மவழி செறிகிலேன்,
நம்பினர்க் குதவி செய்யேன்,
நந்தா வனம்வையேன், மாதான மீந்துயேன்
நற்கொடை யிலாத கையேன்,
புன்மைவழி தேடுவேன், கன்மவழி நாடுவேன்,
பொய்ச்சூது வினை யாடுவேன்,
புல்லரைப் பாடுவேன், புலைமகட் கூடுவேன்,
பொய்ச்சமய வழியோ டுவேன்
சென்மமருள் தாய்தந்தை குருதெய்வ நிந்தனைகள்
செய்துளே னெனினும் வாயால்
சிவசிதம் பரமென்று சொல்லும் அடி யேன்பவந்
தீரா திருக்கு மோதான்?
சின்மய சொரூபனே! உன்மயம தாப்பாத
தெரிசனம் எனக் கருளுவாய்,
சிதம்பர மெனுந்தவர் நிதம்பர விதம்பெறு
சிதம்பர மகாதேவ னே.

6

பாதநூ புரமணி கலின்கலின் கலீனென்று
பரதவித மாடவேங்கைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டாடை மடமடென விட்டாட வரையினிற்
பன்னகக் கச்சையாடச்
சோதிநா லாடவுட ஞுதியே னக்கொப்பு
தொட்டாட விதிகபாலத்
தொடையாட, முழுவெண்பு புடையாட மான்
துள்ளிவிளை யாட மதியின் [கன்று
பாதியா டக்குழையின் மீதுபொற் குண்டலம்
பளபளென் றுடவணியும்
பணியாட, வணியக்கு மணியாட மதலைப்
பசுந்தொடையு மாட வேணிச்
சீதவா னதியாட, மன்றுடு நின்பாத
தெரிசனம் எனக்க ருளுவாய்
சிதம்பர மெனுந்தவர் நிதப்பர விதம்பெறு
சிதம்பர மகாதேவனே!

7

மாதவனு நாவினுறை மாதவனு நால்வேத
வாக்கிய முரைப்ப தொருபால்
வானவரு மன்பினிறை வானவரு மரகர
மாதேவ! னென்ப தொருபால்
ஆதவனு மலையமலை யாதவனு மம்புலியும்
அஞ்சலிசெய் தார்ப்ப தொருபால்
அகிலபுவ னத்துறை சனங்களுஞ் சிவசிவ
அருந்துதிகள் செய்வ தொருபால்
ஓதுறு பதஞ்சலி வியாக்கிர பதத்துமுனி
ஓங்கவொரு பாங்கு ஞற்றும்
உத்தம நிருத்தபரி சுத்தசிவ சம்புவே!
உண்மைதரு ஞான குருவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதமா மதியமணி சோதியே! நின்பாத
தெரிசன மெனக் கருளுவாய்!
சிதம்பர மெனுந்தவர் நிதம்பர விதம்பெறு
சிதம்பர மகாதே வனே!

## 8. மாவைச் சுப்பிரமணியர் தோத்திரம்

இது மாவிட்டபுரக் கந்தசுவாமி கோவிலிலே உற்சவ தினம் ஒன்றிலே பத்தசனங்கள் பால் கட்டிக்கொண்டு வரும் காவடிகளைக் கண்டார் சிலர் வேண்டுகோளின்படி பாடிய வெண்பா.

கோவிற் கடவைக் குருபரனு ருற்சவத்தைச்
சேவித்து நிற்பார் தெருத்தோறுங்—காவிச்செலும்
காவடியைக் கண்டிருப்பார் காண்பரோ கூற்றுவனுர்
தாவடிஏ ழஞ்சுமையைத் தான்.

கோவிற்கடவை என்பது மாவிட்டபுரத்திலே சுப்பிரமணியக் கடவுள் கோவில்கொண்டு வீற்றிருக்கும் ஸ்தானம். தாவடி - தாவுகின்ற பாதம். ஏழஞ்சுமை - எருமை, இது சங்கியாவைத என்னும் பிரகேளிகை எருமை என்பதிலே எகரத்தினை ஏழென்றும், ருகரத்தினை அஞ்சு என்றும் இலக்கம்பற்றி மறைத்துக் கூறினர்.

## 9. திருவிழாத் தரிசனப் பலன்

இது மகா வித்துவானகிய சேனதிராய முதலியாரோடு இம் முத்துக்குமார கவிராசருங் கூடிப் பாடிய விருத்தம் என்பது கர்ண பரம்பரை.

கருவிழா உலகினிடைப் பிறந்துமெய்ம்மை மறந்துழலுங்
கன்ம சென்ம
உருவிழா முன்பனவரே யாயினுங்கோ விற்கடவை
உறையுந் தேவைப்

பெருவிளாங் கனிக்கான்கன் றெறிந்தமான் மருகன்வேற்
பெருமா னுக்காந்
திருவிழாத் தரிசிக்கச் செல்லுவார் யமதண்டம்
வெல்லு வாரே.

## 10. திருவிழாச் சேவையின் சிறப்பு

இது மகா வித்துவானாகிய சேனாதிராச முதலியார் முதலடியும், முத்துக்குமார கவிராசர் மற்றை மூன்றடியுமாகப் பாடிய விருத்தம் என்பது கர்ண பரம்பரை.

இருவரும் ஒரு தேர்த் திருவிழாவிற் சென்று நின்றபோது தேர்த் திருவிழாவிற் சேவை செய்யுஞ் சனங்களையே சுட்டிக் கூறினர்.

கார்படியு நகுலகிரித் திருக்கோயிற் கடவையினுர்
கடவுஞ் செம்பொற்
றேரடியிற் பின்அடியார் திருக்கூட்டத் துடன்வலமாய்த்
தெரிசிப் பார்கள்
ஓரடிக்கோர் பரிமகப்பே றடைவருடம் பாலுருள்வா
ருற்ப வத்தின்
வேரடியுங் கடந்துகந்த வேளடியின் முத்திசென்று
மேவு வாரே.

நகுலகிரி - கீரிமலை இது நகுல முனிவர் என்பவர் யாத்திரிகராய் இங்குள்ள சாகாசங்கம புண்ணிய தீர்த்தத்திலே வந்து தீர்த்தமாடித் தீர்த்தற்கரிய கீரிமுகம் நீங்கப்பெறற காரணம்பற்றி நகுலகிரி என வழங்கப்படுகின்றது. இப்போது இவ்விடம் தீர்த்த மகத்துவம், சிவாலயம், மடாலயம், வித்தியாலயம் முதலியவற்றாற் பிரசித்திபெற்று விளங்குகின்றது.

## 11. சப்பர மஞ்சத் திருவிழா

இது மாவிட்டபுரத்திலே ஒரு சப்பரத் திருவிழாவிலே சென்று நின்றபோது, சுப்பிரமணியக் கடவுள் சப்பிரமஞ்சத் தேறுதற்கண் சொல்லிய விருத்தம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூறுநா லாறுதிருக் குடையானுங் கணங்களும்போய்
நுவன்று நாமங்
கூறிநாத் தழும்புறவே தொழும்புறுங்கோ விற்கடவைக்
குகனூர் கண்ணீர்
ஆறினூர் திருமுகங்க ளாறினூர் படைக்கஞ்சா
வயிலார் சங்கத்(து)
ஏறினூர் சப்ரமஞ்சத் தேறினூர் அடியவரீ
டேறி னரே.

நூறு நாலாறு திருக்குடையான் - ஆயிரங்கண்ணனாகிய இந்திரன். நூறு நாலு - நானூறு. நூறு ஆறு-அறுநூறு. இரண்டினையும் கூட்டுங்கால் ஆயிரமாகும். திருக்கு - கண் ஈடேறல் - வலியுறுதல், பெருமையடைதல்.

## 12. சுப்பிரமணியக் கடவுள் பவனிவருதல்

இது மாவிட்டபுரச் சுப்பிரமணியக் கடவுள் பவனி வருதலைக் கண்ணுற்றபோது கூறிய ஆசிரிய விருத்தம்.

மல்லாக மாதகலான் மருகன்சுன் னாகத்தான்
மகன்பா வாணர்
சொல்லாச்சீர் ஈவினையான் துன்னாலை யானத்தான்
சுரும்ப ரோதிச்
சில்லாலை யிருள்வென்ற குறக்கொடிகா மத்தானைச்
சிகண்டி மாவூர்
வல்லானை மாவிட்ட புரநகரத் திடைப்பவனி
வரக்கண் டேனே.

இதன்கண் வடநூலார் கூறும் பிரகேளிகைவகையுள் ஒன்றாகிய நாமாந்தரிதை என்னும் பிரகேளிகை அமைக்கப்பட்டிருக்கின்றது. பிரகேளிகையாவது கருதிய பொருளை ஆழ்ந்து கிடக்குமாறு மறைத்துவைத்த வெளிப்படையிலே வேறொன்றாகத் தோன்றும்படி விநோதமுறச் செய்யப்படுஞ் செய்யுள். நாமாந்தரிதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவது கருதிய பொருளை வேறு நாமங்களிலே மறைத்திருப்பது. மல்லாகம், மாதகல், சுன்னாகம், ஈவினை, தின்னாலை, சில்லாலை, கொடிகாமம் என்னும் ஊர்ப்பெயர்கள் ஏழும் கருதிய பொருளை மறைத்திருக்கும் நாமாந்தரங்கள். ஈவினை - புன்னாகமரையடுத்துக் கிழக்கே கிடக்கும் ஒரு சிற்றூர். துன்னாலை - புலோலியை யடுத்துக் கிடக்கும் ஓரூர்.

இங்கே மறைத்துவைக்கப்பட்ட பொருளையும் கூறுதும். மல் ஆகம் மாது அகலான் மருகன் - வலிய மார்பிலே ஸ்ரீதேவி யகலாதிருத்தலை யுடையவராகிய நாராயணக்கடவுளுக்கு மருகன். சுன்னாகத்தான்—திருக்கைலாசமலை வாசராகிய சிவன், சீரீவினை யான் - செல்வம் கொடுக்கும் செயலுடையான். துன்னாலையா னத்தான் - மன்மதனுக்கு மைத்துனன். சில்லால் ஐ இருள் வென்ற - தகட்டணியால் வியக்கப்படும் இருளையும் வென்ற குறக் கொடிகாமத்தான் - வள்ளிநாயகியின்மேலே விருப்புடையவன். மற்றைய வெளி.

## 13. காதல் மகளிர் செயல்

இது மாவிட்டபுரத் தேர்த் திருவிழாத் தெரிசிக்க வந்த ஒரு பெண் செயலாக அகப்பொருளமைத்துக் கூறிய ஒரு கட்டளைக் கலித்துறை.

[செவ்வேள்

கரைக்காற் புனல்வயற் றென்மாவைக் கோவிற் கடவைச்
வரைக்கா லிரத மணிக்குர லார்ப்பு வருமுன்னமே
அரைக்கான்முக் காற்கணக் குக்குமென் சந்த மளாவுநறு
விரைக்கா றரக்கடுங் காலாய் விளைந்தது மெய்யெங்குமே.

அரைக்கான் முக்காற் கணக்குக்கு என்பதற்கு இவளுக்கு எனப் பொருள் கூறுவர், இவளுக்கு என்பதில் இ, வ, ளு என்னும் மூன்றெழுத்தினையும் அரை, கால், முக்கால் என்னும் மூன்றும் முறையே குறிப்பாய்க் காட்டி நின்றன. இது சங்கியாதை என்னும் பிரகேளிகையில் அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14. இதுவுமது.

இக்கட்டளைக் கலிப்பாவும் இதன்பின் வரும் கட்டளைக் கலிப்பாவும் நாமாந்தரிகை என்னும் பிரகேளிகையமைத்துச் சுப்பிரமணியக் கடவுளையே பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பட்டவை. இது முருகக் கடவுள் பவனி வருதலைக் கண்டு மயங்கிய மகளிர் செயல் கூறுவது.

முடிவி லாதுறை சுன்னகத் தான்வழி
 முந்தித் தாவடிக் கொக்குவின் மீதுவந்(து)
அடைய வோர்பெண் கொடிகாமத் தானசைத்(து)
 ஆனைக் கோட்டை வெளிகட் டுடைவிட்டாள்
உடுவி லான்வரப் பன்னாலை யான்மிக
 உருத்த னன்கடம் புற்றமல் லாகத்துத்
தடைவி டாதனை யென்று பலாலிகண்
 சார வந்தன ளோர்இள வாலையே.

இக்கட்டளைக்கலிப்பாவிலே கருதிய பொருளை மறைத்துக்கொண்டு வேறொன்றாகத் தோன்றுகின்ற பெயர்களாவன: சுன்னாகம், தாவடி, கொக்குவில், கொடிகாமம், ஆனைக்கோட்டை, கட்டுடை, உடுவில், பன்னாலை, மல்லாகம், பலாலி, இளவாலை என்பன. இவை யாழ்ப்பாணத்துள்ள பிரசித்திபெற்ற சில ஊர்களின் பேர்கள்.

இங்கே மறைத்துவைக்கப்பட்ட பொருளையும் கூறுதும். சுன்னகத்தான் - திருக்கைலாசமலை வாசராகிய சிவன். சுல் - வெள்ளி. நாகம் - மலை. வழி - மகன். தாவடிக்கொக்கு - தாவுகின்ற அடியையுடைய குதிரை. பெண்கொடி - பெண்ணாகிய கொடிபோல்பவள். காமத்தாள் - காமவிச்சையுடையவள். ஆனைக்கோட்டை வெளிகட்டு உடை விட்டாள் - யானைக்கொம்புபோன்ற ஸ்தனத்தையும் மருக்குற் பிரதேசத்தையும் மறைத்துக் கட்டுகின்ற வஸ்திரக் கச்சினை நெகிழ்ந்து வழுவவிட்டாள். உடுவிலான் - நக்ஷத்திரத்தினை மனைவியாகவுடைய சந்திரன். உடு - நக்ஷத்திரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல் - மனைவி. பன்னுலையான் - சொல்லப்படுகின்ற கருப்புவில் வினையுடைய மன்மதன். ஆலை - கரும்பு மல்லாகம் - வலிய மார்பு. பலாலி - பலவாகிய துளி. இளவாலை - பெரிதும் இளம் பருவமுடைய பெண்.

## 15. பேறுபெறல்

பன்னி ரண்டு கரகந் தனைஎட்டுப்
பானை யைத்துண் டதரக் குயவனை,
முன்னி ரண்டு குடங்கையில் ஏந்தியை
முட்டி முட்டிமல் லாய்மாவைச் சாடியைப்,
பொன்இ ரண்டு பெறும்பெருஞ் செட்டியைப்,
போற்று வீர்புல வீர்!சக ரந்தனை
முன்னர் வைத்த கலசப்பத் துப்பெறீஇ
முதன்மை சால்பெரு வாழ்வுறன் மெய்ம்மை [யே.

இக்கட்டளைக்கலிப்பாவிலே வெளிப்படையில் வேறு பெயர்களாய் நின்று கருதிய பொருளை மறைத்து நிற்கும் சொற்களாவன: பன்னிரண்டு கரகம், எட்டுப் பானை, இரண்டு குடம், முட்டி. சாடி, கலசம் பத்து, சால் என்பன. செட்டி என்பதும் சார்பு நோக்கிச் சட்டி என்று கொள்ளும்படியும் நிற்கின்றது, பாத்திரப் பெயர்களாகிய இவற்றுடன் பாத்திர கருத்தாவாகிய குயவன் பெயருந் தொனிக்கின்றது.

இங்கே மறைந்து நின்ற பொருளையும் கூறுதும். பன்னிரண்டு கர கந்தனை - பன்னிரு திருக்கரங்களையுடைய கந்தசுவாமியை. எட் துப்பு ஆனை ஐ துண்ட அதரம் குயம் அனை - எட்பூவினையும் பவளத்தினையும் யானையையும் முறையே நிகர்த்த அழகிய மூக்கினையும் அதரத்தினையும் ஸ்தனத்தினையுமுடைய உலகமாதாவாகிய உமாதேவியார். முன் இரண்டு குடங்கையில் ஏந்தியை - முன்னரே இரண்டு உள்ளங்கையினாலும் ஏந்தி வளர்க்கப்பட்டவரை. முட்டி முட்டி - எதிர்த்தெதிர்த்து. மா - சூரனாகிய மாமரம். சாடி - கொன்றவர். பொன் இரண்டு பெறும் - இலக்குமிபோன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களிருவரை மனைவியாகப் பெற்றுக்கொண்ட. சகரந்தனை முன்னர் வைத்த கலசம் பத்தும் - சகல சம்பத்தும். சால் - நிறைந்த. மற்றைய வெளி. கலசம் பத்து என்பதன் முன் சகரம் என்னும் எழுத்தினை வைக்குங்கால் அது சகலசம்பத்து என நிற்கும்.

## 16. நல்லைச் சுப்பிரமணியர் தோத்திரம்

இக்கட்டளைக் கலித்துறையும் இதன்பின் வரும் இரட்டையாசிரிய விருத்தமும் நல்லைச் சுப்பிரமணியக் கடவுளைப் பாட்டுடைத் தலைவராகவுடையன.

மங்கள நல்லை வடிவேலர் வீதிவந் தார்மடவார்
பங்கயங் காந்தள் குவளைவெண் முல்லை பரப்பிமறு [கோ
கெங்கு நிறைகுடம் வைத்துமெய்த்தொண்டுசெய்தாரிதற்
அங்க முழுதும் புனிதமி ஞர்க்கென் றறைந்ததுவே.

## 17

இது நல்லூர்க் கந்தசுவாமி கோவிற் கார்த்திகைத் திருவிழா ஒன்றிற் சென்று நின்றபோது கடவுண்மாட்டு மானுட மகளிர் நயந்த பக்கமாகக் கூறிய விருத்தம்.

ஆரா தனைக்காந் திருநல்லூர்
ஆறு முகத்தார் மனைவியரோ(டு)
அடுப்பி லடுத்த நெருப்பிலன்பர்
அகத்தை உருக்குஞ் சாறுவைத்தார்
வாரா மறுகி னேராய்மென்
மடவா ரெடுத்தார் காற்பலச்சொன்
மரத்தைக் கோளி யாரெடுத்தார்
மருங்கின் மயலாய் நின்றேனே!
ஊரா ருரையும் வட்பலரே!,
உற்று ரினுங்கோ வம்பலரே!
உலவை யீரும் வைவாளே!
உறுக்கி யனையும் வைவாளே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேரா வுடம்பில் வருப்பீரே!
விரும்பி யென்பால் திரும்பீரே!
விளேவின் மதனுக் கத்தானே!
விருப்பு மென்னு கத்தானே!

அடுப்பி லடுத்த நெருப்பில் அன்ப ரகத்தை யுருக்கும் சாறு வைத்தார் என்பது அடுக்களையிற் செய்யப்படும் பாக விடயமாகப் பிரயோகிக்கும் ஒரு சொற்றொடர் இதனுள்ளே மறைந்து நின்ற பொருள்: பரணிக்கு அடுத்தநின்ற கார்த்திகை நக்ஷத்திரத்திலே திருவிழா வைத்தார் என்பது. அடுப்பு - பரணி. நெருப்பு - கார்த்திகை. சாறு - திருவிழா இது வஞ்சிதை என்னும் பிரகேளிகை. வஞ்சிதையாவது பிறாறியாது பொருளை மறைத்து நிற்பது.

காற்பலச்சொன்மரம் என்பது ஆராய்தற்பாலது. கோளியார் - ஆலத்தி. இதுவும் நாமாந்தரிதை. கோளி - ஆலமரம். ஆர் - ஆத்திமரம். பின்னிரண்டடியும் இறுதியோ டிடைமடக்கு. வம்பு அலர் - வம்பாகிய பழிமொழி. கோவம்பலர் — கோவமுடையார் பலர். உலகை ஈரும் வை வாள் - தென்றற்காற்றானது அரிகின்ற கூரிய வாட்படைபோன்றாது வைவாள் - இகழ்ந்துரைப்பாள். வருப்பீரே - பசலை வரும். மற்றைய வெளி.

## 18. மயிலணி நரசிங்கமூர்த்தி தோத்திரம்

கல்லாத புல்லர் மனையணு காமற் கவியவர்மேற்
சொல்லாமல் நல்குர வில்லாமல் நித்தந் துயர்க்கடலுட்
செல்லாமல் நல்ல வரந்தரு வாய்செந் திருமருவு
நல்லாய்! மயிலணி வாசா! விசயநர சிங்கமே!

## 19. இதுவுமது

வித்துவான் வருகிறார் மத்தியா னம்பொழுது
வெய்யிலுங் கடிது கையில்
வேறென்ன வுதவுவது சோறென் னினுமுதவ
வேண்டுமென் றன்பர் கூறப்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்திதா னுரரிசி குத்தியாக் கினதிங்கே
புலவனூர் வருவரென்றே
போங்காணு மென்மனைவி யாங்கார வசனங்கள்
புகலவவ ரிகலாகியே
சத்தியொரு வர்க்கொருவர் மெத்துகன பூசலாக்
கைகலந் தாடுமூடக்
கயவரைப் பாடாம லுனதுபொற் பாதமே
கவிமாலை சூடவருள்வாய்!
சித்திசே ரடியர்க்கு முத்திதா னருளுநர
சிங்கமே! மயிலணியில்வாழ்
தேமலர்க் கையனே! காமனுக் கையனே!
திருமங்கை மணவாளனே!

## 20. ஐயனூர் தோத்திரம்

இது சுன்னாகத்து மாசாத்த மூர்த்திமீது ஆசிரிய விருத்தம் பாடுதற்குச் சந்திரசேகர விநாயக மூர்த்தியைத் துதிசெய்த மங்கல வாழ்த்து.

ஓங்குகரு ணையினுருவ மாங்குயிலை நிகருமொழி
உமையம்மை பங்கனும்
உத்தமனு நத்தமர வத்தமிசை வைத்தவனு
மொண்சால மரநீழலில்
தாங்களிரு வருமாண்பெ ணுங்கொலென மருவியே
சரமசர முய்யமகவாய்த்
தந்திடச் சுன்னைநகர் வந்திரட் சிக்குமா
சாத்தவருண் மூர்த்திமீது
தேங்குமது ரத்தமிழி னாசிரிய மோதவென்
சித்தத்து ணித்தமுறையும்
திகழுமரு மறைமுதற் பிரணவத் துருவான
சிற்பர னுன்கினுடனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்குமொரு கையன்முரு கையனுட் யக்குறத்
தையன்மை யற்குதவினோன்
சந்திரசேகர ளைந்த சிந்துரா னனஞான
தற்பரன் பொற்பாதமே

சந்திரசேகரவிநாயகருடைய பொற்பாதம் என் சித்தத்தல்லே நித்தமும் உறையும் என முடிவு செய்க. நத்து அமா அத்தமிசை வைத்தவன் - விட்டுணு. சிவபிரான் மோகினிவடிவங் கொண்டு நின்ற விட்டுணுவை மராமர நீழலிலே கூடிப் பெற்ற பிள்ளையே மாசாத்தமூர்த்தி எனப்படும் ஐயனர் இக்காரணத்திஞல் ஐயனுருக்கு அரிகரபுத்திரர் என்றும் பெயர். அரிகரபுத்திரர் - அரிக்கும் அரனுக்கும் புத்திரர். இவ்வரலாறு இங்கே முன்னிரண்டடியிலும் அமைக்கப்பட்டிருக்கின்றது.

## 21

பள்ளக் கடற்குமிழி கொள்ளக் கடைந்தமுது
பண்ணவர்க் கருளுமுந்திப்
பதுமத்த னும்புதிய மருமத்த னுந்தரும்
பாலகா ஞாலமுதல்வா
கள்ளக் கொடுந்தொழிலி னுள்ளத்தி ேனுடுச்சி
கைப்பற்று மசமுகிதனைக்
கண்டங் கறுத்தவள்கை துண்டப் படுத்தமா
காளனை விடுத்தபரனே!
அள்ளற் குரம்பினிடை வெள்ளத் தொதுங்கிவந்
தவிர்முத்து மதியென்னவே
ஆம்பற்கள் விள்ளமரை கூப்பச் சுரும்பிசை
யளித்திட நெளித்துவாளை
துள்ளப் பழங்களுதிர் பள்ளக்கு வளைவயற்
சுன்னையம் பதிவாசனே!
சுக்கதத் துவமெத்து பத்தருத் தமசித்த
துத்யநித் தியவையனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உந்திப்பதுமத்தன் - விட்டுணு. மதுமத்தன் - சிவன். சசி - இந்திராணி. அசமுகி - சூரனுடைய தங்கை. அசமுகிதனைக் கண்டங் கறுத்தவள்கை தண்டப்படுத்த என்பதனை அசமுகிதனைக் கண்டு அங்கு அவள் கை அறுத்துத் தண்டப்படுத்த எனப் பிரித்துக் கூட்டிப் பொருள் கொள்க.

இது வியற்கிராந்தை என்னும் பிரகேளிகை. வியுற்கிராந்தையாவது அந்நுவயத்தாற் பொருள் கொள்ளும்படி மறைத்து வைப்பது. மாகாளன் - ஐயனாருடைய படைத்தலைவராகிய வீரமாகாளர். துத்யன் - துதிக்கப்படுவோன்.

## 22

மாதண்டம் வளைநேமி கோதண்டம் வாள்கொண்டு
வளரண்ட பகிரண்டமும்,
மலருந்தி மிசைதந்த நரசிங்க வவதார
மதுசூத னப்பெருமனும்,
வேதண்ட முறுகாள கண்டனும் பண்டுதரும்
விமலமெய்ஞ் ஞானரூபா!
விழியா யிரத்தாச ரயிரா பதத்தர்தமை
மிசைவாழ்வு வைத்தபரனே!
தாதுண்டு வரிவண்டு மிகமண்டி யிசைகொண்டு
தடமண்ட வெடிவரால்
தங்குதெங் கின்பரும் பைங்குரும் பைக்குலை
தகர்த்திடத்தண் டலைதொறும்
சூதுண்டு வளர்முலைமி னார்வண்ட லபர்வயற்
சுன்னையம் பதிவாசனே!
சுத்ததத் துவமெத்த பத்தருத் தமசித்த
துத்யநித் தியவையனே!

## 23

இது மாசாத்த மூர்த்தியைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு ஒரு விவாக விஷயத்திற் பாடிய கட்டளைக் கலித்துறை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பூர் விழிக்கடை மங்கையர் நாற்றிடு மார்வத்தஞ்சிக்
கம்பூர் வளவயற் சுன்னுகத் தையன் கனகிரிமேல்
வம்பூர் மனப்புல்லர்க் கன்பாக நாள்விட்டு வாழ்வதுதான்
செம்பூ ரணியை நரிகாத் திருந்தசெய லொக்குமே.

## 24. சுன்னுகம்

புன்னுக நீழலும் பொய்கை நடுவிற் பொருந்தியதும்
என்னுக ரோமஞ் சிலிர்ப்பெய்த வைங்கர ளெய்தியது
முன்னுக நாடி யரியர னீன்ற முதல்வன்புரம்
சுன்னுக மாமித் தினமேது சொல்லித் துதிப்பதுவே.

## 25. கிறீஸ்தவர்கள் எங்களை அடுத்துக் கெடுத்தார்கள்

*பின்வரும் பாக்கள் இரண்டும் கிறிஸ்து மதத்திலே வேதன நிமித்தம் பிரவேசித்த சிலரை உடுவிலில் இருந்த பாதிரியார் ஒருவர் விலக்கியபோது விலக்கப்பட்டார் கூற்ருகக் கூறிய ஆசிரிய விருத்தங்கள்.*

நல்லவழி காட்டுவோம் உடுபுடைவை சம்பளம்
நாளுநா ளுந்தருகுவோம்
நாஞ்சொல் வதைக்கேளும் எனமருட் டிச்சேர்த்து
நானமுஞ் செய்துவிட்டார்,
மெல்லமெல் லப்பின்னே வேலையிங் கில்லைநீர்
வீட்டினிடை போமென்கிருர்
வேண்டியொரு கன்னியைக்கைக்கொண்டுகருவாக்கி
விட்டபின் கணவன்வேலை
இல்லைநீ போவென்று தள்ளுவது போலுமே
இனிஎம்மை எம்உறவினேர்
எட்டியும் பாரார்கள் கிட்டவும் வாரார்கள்
ஏர்ப்பூட்டி உழவுமறியோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லலாம் இம்மைக்கு மறுமைக்கு நரகினுக் (கு)
ஆளாகி மிகஅழிந்தோம்
ஆபரா பரனே! கிறிஸ்தவர்கள் எங்களை
அடுத்துக் கெடுத்தார்களே.

## 26. இதுவுமது

வண்டியேன்? மஞ்சமேன்? கதிரையேன்? குதிரையேன்?
வாங்குமெத்தைகள் சிவிகையேன்
வட்டித்த கவிகையேன்? மல்லிகைச் செடிகளேன்?
வாழைகமுகுயர் தோட்டமேன்
பெண்டிரேன்? பிள்ளையேன்? திரவியத் தேட்டமேன்?
பேணிவரு காணியினமேன்?
பேரின்ப ஞானவழி இதுகொலோ? யேசுவும்
பின்பற்று சீடருங்கைக்
கொண்டதோ விவையெலா மவர்நின்ற ஞானவழி
கூறிநற் புத்திசொல்லிக்
குணமாக்க வல்லஇவர் பணமாக்க வந்தது
குறிப்பறிந் தும்வறுமையால்
அண்டினோம் உண்ணவும் உடுக்கவும் வாழவும்
அதற்குமங் கிடமில்லையே
ஆபரா பரனே! கிறிஸ்தவர்கள் எங்களை
அடுத்துக் கெடுத்தார்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுன்னுகம்

# ஐயனார் ஊஞ்சல்

## காப்பு

பொன்னாக வில்வளைத்துச் சுன்னா கத்தில்
புராரியுறைந் ததினாலும் பொறிச்செஞ் சூட்டு
நன்னாக அணையினின்மா லுறைத லாலும்
நானுமவர் பாலகனும் நியாயத் தாலும்
சுன்னாகந் தனிலுறைவோம் என்று வந்த
சுத்தமகா சாத்தன்மிசை ஊஞ்சல் பாட
முன்னாக வெவ்வினைக்கும் நிற்கும் ஞான
மும்மதக்கை முகக்களிறு முதற்காப் பாமே.

வித்துருமத் துத்திரங்கள் நாட்டி மூட்டி,
விட்டமர கதவயிரச் சட்டம் ஓட்டிப்
பத்தரைமாற் றுப்பொன்னின் வடங்கள் பூட்டிப்
பதுமரா கப்புதிய பலகை மாட்டி,
முத்துமணிப் பந்தரிட்டுத் தெய்வத் தச்சன்
முறைமையினாற் படிசமைத்த ஊஞ்சன்மீதே
அத்திமுகன் சகோதரனே! ஆடீர் ஊஞ்சல்,
அரியரனார் திருக்குமரா! ஆடீர் ஊஞ்சல்.

உதயமனம் அத்தமனங் கால்க ளாக,
ஓங்குமண்ட முகடுநடு வளைய தாகச்
சிதைவிலட்ட மாநாகங் கயிற தாகச்,
செழும்புவியே அதிலமைத்த பலகை யாக,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதையிருள்சீத் தொளிர்பரிதி மதி உடுக்கள்
பொறியாக மாகமுற்றும் பந்த ராக,
அதிககிரு பாகரனே! ஆடீர் ஊஞ்சல்,
அரியரனூர் திருக்குமரா! ஆடீர் ஊஞ்சல்.

தாரணியுஞ் சுரிகுழலின் வரிவண் டாடச்
சந்திரோ தயவதன நுதற்பூண் ஆட
வாரணியுங் களபதன மாலை ஆட,
மணிப்பணியின் குழைஆட, மருங்கு லாடப்
பூரணைபுட் கலையென்னுந் தேவி மார்கள்
புனைமணிமே கலைஆடக் கூடிஆட,
ஆரணத்தி னுட்பொருளே! ஆடீர் ஊஞ்சல்;
அரியரனூர் திருக்குமரா! ஆடீர் ஊஞ்சல்.

செய்யசடா முடியினதி ததும்பி ஆடத்,
திருமருமத் தொடையின்முகந் ததும்பி ஆடக்,
கையினணி செண்டுடன்மான் கலையும் ஆடக்
கலாநிதியின் வகிர்மறுமான் கலையும் ஆடச்
சையமுலைக் கணிபணிமுத் தாரம் ஆடத்
தையலார் இருவரும்வித் தாரம் ஆட,
ஐயனே! மாசாத்தா! ஆடீர் ஊஞ்சல்;
அரியரனூர் திருக்குமரா! ஆடீர் ஊஞ்சல்.

விண்தலமெ லாந்துதிக்க மதிக்க வல்ல
வீரமகா காளனயன் மேவ வெள்ளைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டன்மிசை நீலரவி உதித்த தென்னக்
கோட்டுமத வாரணமேற் பவனி போந்து
மண்டலஞ்சேர் சுன்னாகத் துறையுந் தொண்டர்
வறுமைபிணி துயரமெலாம் மாற்றி ஆளும்
அண்டரண்ட நாயகனே! ஆடீர் ஊஞ்சல்
அரியரனார் திருக்குமரா! ஆடீர் ஊஞ்சல்.

செஞ்சொல்மது ரத்தமிழ்ப்பா மாலை சாத்தி
சிந்தனைவந் தனையவர்க்குந் திருநா மத்தால்
கஞ்சமலர் அடிபரவு மவர்க்கு முள்ளங்
கசிந்துதுதிப் பவர்க்குமூச்சி காலைமாலை
வஞ்சனைநோய் பசாசுகொடு வறுமை இம்மை
மறுமைக்கும் நரகினுக்கும் பிறவி நோய்க்கும்
அஞ்சல்அஞ்ச லெனுந்தேவே! ஆடீர் ஊஞ்சல்,
அரியரனார் திருக்குமரா! ஆடீர் ஊஞ்சல்.

புங்கவர்கள் நால்வேத கீதம் பாடப்
புனையிழையார் பரதவித நடனம்ஆட,
மங்கலநா லிரண்டுமிரு மருங்குங் கூட,
மாதவர்கள் சொரியுமலர் மாரி மூடச்
செங்கரங்கொண்டு அரம்பையர்சா மரங்கள்போடத்
திங்கள்படி மணிமாடத் தென்பால் மேவும்
ஐங்கரன்கண் டுளமகிழ ஆடீர் ஊஞ்சல்,
அரியரனார் திருக்குமரா! ஆடீர் ஊஞ்சல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திரனோ(டு) எண்திசைமன் னவரும் போற்றி,
இருமருங்கு நின்றுமணி வடந்தொட் டாட்டச்
சந்திரசூ ரியர்குளிர்வெண் குடைகள் ஏந்தத்
தமபுருதும் புருமுதலோர் சுதியிற் பாடப்
புந்திமகிழ்ந் தரம்பையருஞ் சசியும் பாங்காய்ப்
பூரணைபுட் கலைக்கணிகள் புனைந்து போற்ற
அந்தரதுந் துபிஅதிர ஆடீர் ஊஞ்சல்,
அரியரனார் திருக்குமரா! ஆடீர் ஊஞ்சல்.

தீரனதி வீரமகா காளன் என்னுஞ்
சேனைமுதற் றலைவனட்ட திசையுஞ் சுற்றி
சாரதவெள் ளத்துடனே நின்று காப்பத்
தன்னாக மிகமகிழ்ந்து சுன்னா கத்தில்
சீரடியார் றெனும்பயிருக் கருளின் மாரி
தினந்தினமும் பொழிந்துதவி செய்துகாக்கும்
ஆரருளின் கடல்வண்ணா! ஆடீர் ஊஞ்சல்,
அரியரனார் திருக்குமரா! ஆடீர் ஊஞ்சல்.

காரியே! கடல்வண்ணா! ஆடீர் ஊஞ்சல்,
காளகண்ட உருத்திரனே! ஆடீர் ஊஞ்சல்,
மாரியாய் அருள்பொழிவாய்! ஆடீர் ஊஞ்சல்,
மதகளிற்றார்க் கிடுமுதல்வா! ஆடீர் ஊஞ்சல்,
சீரியா! சிவயோகி! ஆடீர் ஊஞ்சல்,
செண்டமர்ந்த திருக்கரனே! ஆடீர் ஊஞ்சல்,
ஆரியனே! ஐயனே! ஆடீர் ஊஞ்சல்,
அரியரனார் திருக்குமரா! ஆடீர் ஊஞ்சல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரமார் முகில்மாரி பொழிந்து வாழ்க;
சுரபிநிரை வாழ்க; மன்னர் செங்கோல்வாழ்க
மைந்தர்மனை நிதிபெருகி இல்லறத்தின்
மனைவாழ்க; மகாசைவ சமயம் வாழ்க;
சிந்தனையிற் கவலையிடி வறுமை துன்பம்
தீர்ந்தடியார் வாழ்க; சுன்னைப் பதியும்வாழ்க;
அந்தணர்தம் கிளைவாழ்க; ஆடீர் ஊஞ்சல்,
அரியரனார் திருக்குமரா! ஆடீர் ஊஞ்சல்.

## லாலி

லாலால லலலால லாலால லாலா

சீரோங்கு பரமேச கேசவர்தம் புதல்வா!
திருவோங்கு பூரணைபுட் கலையிருவர் முதல்வா!
லா. லா

நேரோங்கும் அழகுதிகழ் பூஞ்செண்டுப் படையாய்!
நிலையோங்கு நலம்பூத்த பெருங்கருணை யுடையாய்
லா. லா

ஏரோங்கும் ஒலிமலியுங் கழல்சிறந்த பாதா!
இசையோங்கு தேவர்கணம் இனிதிறைஞ்சு நாதா
லா. லா

வாரோங்கு கழனிபொலி திருச்சுன்னை வாழ்வாய்!
வளமோங்கு மாசாத்த மூர்த்தினைப் பணிவாம்.
லா. லா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கப்பற் பாட்டு

ஏலேலோ ஏலஎலோ ஏலேலோ ஏலஎலோ

ஆதிபுரம் சோதிவஸ்து தந்தத் தையை
முக்கண் ஐயன் வெள்ளைவிடை ஊர்திக்கு
மாதவத்தோன் பணிபாதம் அம்பலவாணன் மகன்
கப்பலிது இந்தத் தையா.

மங்கையர்க் கானஒரு மஞ்சட் சிவப்பு
மைக்கூடு கண்ணாடி வண்ணவளை சிப்பு
கொங்கைக் கிசைந்தவொரு குத்தா றவுக்கை
குங்குமம் செம்பவளக் கஸ்தூரி மஞ்சள்
ஏலேலோ ஏலஎலோ

திங்கள் நுதலுக்கான திலக செந்தூரம்
செம்பஞ்சு திருநாமத் தாசிலாப் பொடியும்
கொங்கு வங்காளத்தில் விலைநலம் பேசி
குமரவேள் கப்பல்கொண்டு வருகுது அப்பா,
ஏலேலோ, ஏலஎலோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானக்கும்மி,
# யேசுமதபரிகாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞாபனம்

## ஆசிரியவிருத்தம்

சீர்கொண்ட கூடஸ்த நித்திய சுரூபனுய்ச்
சிற்சத்தி மூர்த்தியாகித்
திகழ்சுத்த சாட்குண்ணிய சகிதனுய் நின்றபரா
சிவனையவ னருளினுலே
சிந்தித்து வாழ்த்திப் பணிந்துசற் குருமூர்த்தி
சேவடி சிரந்தரித்துச்
சிவனருள் சிறந்தகணர் தேவர்முனி வராதி
சிவபத்தர்தமை யேத்தியே
ஏர்கொண்ட பரமபதி சிவனொருவ னேயவ
னியம்பியரு ளாதிநூலும்
ஏகார்த்த நிகமாக மங்களே யந்நூலி
னிசைபெறுஞ் சற்சமயமும்
இதமோங்கு சைவமே பாகதி யுபாயமு
மியைந்தசிவ தீக்ஷையொன்றே
என்னுமிவ் வுறுதிதனை முன்வினை வசத்தினு
லெள்ளளவு முணராமலே
கூர்கொண்ட மதியின்றி நீதிதிரி பாதிரிகள்
குலவுகலி யுகமதனிலே
கொடியவஞ் சகமிக்க துட்டநரர் சிலர்முன்
குறித்தெழுதி வைத்ததிய
கூடவிவி லியநூலை மெய்நூ லெனவுளங்
கொண்டதனை நாடுதோறுங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறிப் பிழைத்திட நினைந்து தம்நாட்டவர்
கொடுத்தபல பொருள்கவர்ந்தே
பார்கொண்ட விந்நாட்டில் வந்துசில சிதடரைப்
பலபொருள் கொடுத்திழுத்துப்
பாழ்நரகி னுய்க்கமுயல் வண்ணமழி வுறவவர்கள்
பகர்மத விரோதமெல்லாம்
பலரறிந் திகழ்ஞானக் கும்மியோ டேசுமத
பரிகார மெனுநூல்களைப்
பண்புதரு மச்சிடைப் பதித்துலக மெங்கணும்
படர்வித்த லுற்றனரோ.

## பிழைதிருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 8 | 12 | அரசு | மாசு |
| 9 | 10 | அநத | அந்த |
| 10 | 26 | பாதகம் | பாதகந் |
| 14 | 9 | சுத்தமென்றல்லவே | சுத்தமென்றல்லவோ |
| 15 | 15 | தாரகையென்றி | தாரகையொன்றி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதிதுணை

# ஞானக்கும்மி

## காப்பு

சீர்கொண்ட வேதாக மங்களைப் பொய்யென்று
செப்பு மிலேச்சர் விவிலிய நூலினிற்
சார்கொண்ட பொய்மை விளங்கவோர் மெய்க்கும்மி
சாற்றப் பரசி வன்காப் பாமே.

## க. மதவிகற்ப இயல்பு

### ஆசிரியவிருத்தம்

சொல்லரிய பலயுகங்கள் கழிந்திடவும்
விகற்பமொன்றுந் தோயா தூற்ற
நல்லங்க மாகமங்க ளுணர்த்துசைவ
சமயவுண்மை நாடித் தோராப்
புல்லர்சிலர் மெய்யெனக்கொள் விவிலியநூ
லிடைப்புகன்ற பொல்லா மார்க்கஞ்
சொல்லுறுமிக் கலியுகத்தின் மூளைத்துவிகற்
பித்ததிறஞ் செப்புவேனே.

ஆதியி லோரா யிரத்தரு நூற்றுப்பத்
தாங்கலி யத்தத்தில் மோசேயாம் வஞ்சகன்
ஓதுபல் புத்தகந் தீட்டிச் சமயமொன்
றுண்டாக்கி நாட்டினன் ஞானப் பெண்ணே. (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாற்றிய மூவாயி ரத்துநூற் றொன்றாகச்
சாருங் கலியத்தந் தன்னில் யோசேப்பினால்
தோற்றிய யேசுவும் சிடரு மோர்மதம்
தோன்றுவித் தாரேடி ஞானப் பெண்ணே. (2)

மூவாயி ரத்துநா னூற்றொன்ற தாகவே
முன்னுங் கலியாண்டில் ரோமையி லோர்குரு
மேவுங்கத் தோலிக்க மார்க்கமென் றொன்றினை
வேறாகச் செய்தனன் ஞானப் பெண்ணே. (3)

பின்னுமம் மார்க்கத்தார் தங்களு டன்சிலர்
பேதங்கொண் டேதாமு மோர்மத முண்டாக்கி
மன்னுங் கிரேக்க மதமென்று சொல்லி
வழங்குவித் தாரேடி ஞானப் பெண்ணே. (4)

நாலாயி ரத்தறு நூறுங் கலியாண்டில்
நல்லறி வில்லாத லுத்தே ரெனுந்தூர்த்தன்
மாலார் புரொடெஸ்டாண் டென்னு மொருதுட்ட
மார்க்க மியற்றினன் ஞானப் பெண்ணே. (5)

முந்திய மார்க்கத்தைத் தேவ னருளினால்
மோசேசெய் தானெனில் யேசுவென் போன்பின்பு
தந்திடு மார்க்கத்தைச் சத்திய மாமென்று
சாதிப்ப தெப்படி ஞானப் பெண்ணே. (6)

சத்திய மாவது யேசு மதமெனிற்
சாற்றிய வம்மதம் தோற்றிய பின்னரே
கத்தோலிக் கென்னு மதமொன்று தோன்றிய
காரண மேதேடி ஞானப் பெண்ணே. (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சமயங்கள் சத்திய மாகி
இருக்கி லிவைகளைத் தள்ளிப் புதிதாக
வந்த கிரேக்க சமயமென் ஞென்றை
வழங்கினர் யாரேடி ஞானப் பெண்ணே. (8)

ஆய சமயங்கள் பின்னு நெடுங்காலம்
ஆங்கு வழங்கி விளங்கியே வந்துழி
மாயனுத் தேரினு லேபுரோட் டெஸ்டாண்டு
மார்க்கமேன் வந்தது ஞானப் பெண்ணே. (9)

ஆதியிலே வந்த மார்க்கமுந் தள்ளி
அதற்குப்பின் னேவந்த மார்க்கமுந் தப்பியே
பேதை மனுஷனுண் டாக்கின மார்க்கத்தைப்
பேணுவ தெப்படி ஞானப் பெண்ணே. (10)

வல்லவர் கல்வி மதத்தி லுண்டாக்கிய
வம்புச் சமயத்தை நம்புமென் றேபிறர்
சொல்லுவார் சொல்லினுங் கேட்பார் தமக்கது
தோன்று திருக்குமோ ஞானப் பெண்ணே. (11)

முன்னே கடவு ளருளிய மார்க்கத்தை
முக்கிய மன்றென்று தள்ளிச் சிலமக்கள்
பின்னேதம் புத்தியாற் செய்த மதங்கள்
பிழையல்ல வோவேடி ஞானப் பெண்ணே. (12)

பெண்ணுசை யாலே யுலுத்தே ரியற்றிய
பேதை மதத்தினை நம்பி வழிக்கொளல்
மண்ணுலே செய்த குதிரைகொண் டாற்றின்
வழிக்கொள்வ தொக்குமே ஞானப் பெண்ணே. (13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னே தொடங்கிய மோசே முதலிய
மூர்க்க மனுடர்செய் மார்க்கங் களையிவர்
இன்னேசன் மார்க்கங்க ளென்றுசொன் னலிதில்
ஏது பயன்வரும் ஞானப் பெண்ணே. (14)

## உ. யேகோவா இயல்பு

### கோச்சகக்கலிப்பா

உலகமெலாந் தருமிறைவ னொருவனுஞ் சிவனேயென்
றிலகுநிக மாகமங்க ளியம்பிடவுந் தெளியாமே
மலமகலா தமர்ந்தயெகோ வாவிறைவ னெனப்பிதற்றிக்
கலகமிடு மூர்க்கருரை கண்டனஞ்செய் திடுவேனே.

தேவன் றனக்கு மகிமையுண் டாகவே
சிவர்க டம்மைப் படைத்தானென் றுலந்தத்
தேவன் றனிநித்தி யானந்த னென்றிவர்
செப்புவ தெப்படி ஞானப் பெண்ணே. (15)

தன்னை வணங்க நரரைப் படைத்தனன்
தற்பர னென்கில் நரரைப் படைத்திட
முன்னர் வணங்க வொருவரு மில்லாமல்
முட்டுப்பட் டான்போலு ஞானப் பெண்ணே. (16)

தம்பிரான் கற்பனை தன்னைப்பே யொன்று
தடுத்துக் கொடுத்ததென் றுலந்த மார்க்கத்தை
நம்பலா மோவந்தப் பேய்க்குள்ள தத்துவம்
நாதனுக் கில்லையோ ஞானப் பெண்ணே. (17)

தேவன் விதித்த விதியைப்பி சாசொன்று
சேர்ந்து விலக்கின தென்ப தறிந்தும்பின்
மேவிய பாம்பு தனைவிரு தாவில்
வெகுண்டு சபித்ததென் ஞானப் பெண்ணே. (18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதாமே வாள்வைகுந் தோட்டத்தி லேநா
காக்கு நச்சுக்கனி காய்க்கு மரமொன்றைத்
தீதாகத் தேவன் முளைப்பித்து வைத்த
திறமென்ன வோசொல்லு ஞானப் பெண்ணே. (19)

நச்சுக் கனியிது தின்று மிறப்பு
நரகமு மாமென்று கர்த்தன்முன் கற்பிக்க
இச்சித்துத் தின்றவ ரச்சம யத்தில்
இறவா தொழிந்ததென் ஞானப் பெண்ணே. (20)

அப்பமு மான்கன்றுந் திவ்விய கர்த்தன்முன்
ஆபிர காமிடத் துண்டானென் பாரது
தப்பல்ல வோசொல் லுருவமில் லாதவன்
தானுண்ட தெப்படி ஞானப் பெண்ணே. (21)

கைவிர லாற்பத்துக் கற்பனை தீட்டினன்
கர்த்தனென் பாருரு வில்லா தவனுக்கு
கைவிர லெங்குண்டு பொய்மார்க்க மென்பதைக்
காட்டிக் கொடுக்கிறார் ஞானப் பெண்ணே. (22)

ஏகன் பாரபர னென்கிறார் மூவரொன்
றெண்ணு கிறாரந்த மூவரு மோர்வடி
வாகுமென் பாரிது மெய்யாகில் மாறு
அரூபி யெனலாமோ ஞானப் பெண்ணே. (23)

ஆதாமின் சந்ததி முற்று நரகத்திற்
காமென்று கர்த்தன்முன் கட்டளை யிட்டது
தீதாகப் பின்பவர் தங்களை முத்தியிற்
சேர்த்தது நீதியோ ஞானப் பெண்ணே. (24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாவிதென் போன்பா ராரத்தைத் தீண்டலாற்
ருவிது வின்மனே யாட்டிக ளேப்பிறர்
மேவிப் புணருக வென்றந்தக் கர்த்தன்
விளம்பும் வியப்பேது ஞானப் பெண்ணே. (25)

ஓசியா வைச்சோரப் பெண்ணோடு கூடி
உவந்திரு வென்று யேகோவா புகன்றனே
கூசாம லிப்படிக் கர்த்தன்சொன் னவினிக்
கூசுவ தேதுக்கு ஞானப் பெண்ணே. (26)

ஆவியை யேவியே பொய்மொழி செல்லுவித்
தாகாப்பை யும்மவன் சேனைகள் யாவையும்
சாவக்கொன் ருன்கர்த்த னென்பா ரவற்கது
தானீதி யாகுமோ ஞானப் பெண்ணே. (27)

## ௬. யேசு இயல்பு

### கலிவிருத்தம்

தொல்லோர்புகழ் சிவனேயுயிர்த் தொகையாவையும் புரக்க
வல்லோனென நிகமாகமம் வகுத்தோதவு மேன்மை
இல்லாநா னும்யேசுவிங் கெமைக்காப்பனென் றுரைக்கும்
பொல்லாதவர்க் குணர்வேறிடப் போதித்திடு வேனே.

தேவன் சனன மரணமில் லானென்று
செப்பிடு வார்மரி யாள்வயிற் றோன்றியே
சாவுண்ட பாலனைத் தேவனென்றே செப்புந்
தந்திர மேதேடி ஞானப் பெண்ணே. (28)

தந்தையும் மைந்தனும் வேறல்லர் யேசுவே
தம்பிரா னென்கிறார் யேசு சிலுவையில்
எந்தையே யேனென்னைக் கைவிட்டீ ரென்றழு
தேங்கின தேதுசொல் ஞானப் பெண்ணே. (29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்பிலாக் கர்த்தனே யேசு வடிவாய்ச்
சகத்தி லவதரித் தானெனில் யூதரால்
முப்பத்து மூன்றும் வயதிற் சிலுவையில்
மொத்துண் டிறப்பானோ ஞானப் பெண்ணே. (30)

ஓதுஞ் சகலசா மர்த்திய ஞானமெய்
உட்சுத்தம் யேசுவுக் குள்ளவென் றூலவன்
யூதர் பிடிப்பாரென் றஞ்சிப் பதுங்கி
ஒளித்துத் திரிந்ததென் ஞானப் பெண்ணே. (31)

மார்க்கத்தார் சாதியார் சேர்க்கக் கூடாமல்
வதைத்துக் கையாணி புதைத்திட்டுச் சந்நியிற்
பார்க்கட்டு மென்று சிலுவையி லேயிடப்
பட்டவன் றேவனும் ஞானப் பெண்ணே. (32)

மாசற்ற மத்தேயு லூக்காமுன் சொன்ன
வமிச வரிசைகள் வேறுவே றுனுக்கால்
யேசுக் கிறிஸ்துதான் வந்து பிறந்ததிங்
கெந்த வமிசத்தில் ஞானப் பெண்ணே. (33)

கன்னி மரியாள் கணவ னிருக்கவுங்
கர்த்தனு லேபிள்ளை பெற்றன ளென்கிறார்
மன்னிய கர்த்தன் பிதாவாகில் யோசேப்பின்
மைந்த னெனலாமோ ஞானப் பெண்ணே. (34)

நிச்சய மான பராபரன் முன்னே
நியமித்த மார்க்க நிலைமையின் றாகவே
தச்சன் மடங்கட்டு வானன்றி மார்க்கத்தைத்
தந்திட வல்லனே ஞானப் பெண்ணே. (35)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயா நரகத்திற் போயினர் மீண்டு
வாரொன்பர் யேசுமுன் பாதல மார்க்கத்திற்
போயினு னேயவன் மீண்டுவந் தானெனெல்
பொய்யல்ல வோசொல்லு ஞானப் பெண்ணே. (36)

அப்படி வத்தி லடியுண்டு குத்துண்
டறையுண்டு செத்துயிர்த் தான்யேசு வென்கிறூர்
இப்படி வித்தைகள் இந்திர சாலத்தும்
இல்லையன் றோவேடி ஞானப் பெண்ணே. (37)

யேசுவைப் பேய்வந் திழுத்துக்கொண் டேகி
யிடர்செய்து காட்டிடை நாற்பது நாண்மட்டும்
அரசுப டுத்திற்றென் றூலவன் பேய்களை
மாற்றுவ தெப்படி ஞானப் பெண்ணே. (38)

மெய்ப்பரி சுத்தாவி யாலே பிறந்துபின்
மேற்பரி சுத்தாவி தன்னையும் பெற்றுள்ள
மெய்ப்பரி சுத்தனும் யேசுவைச் சாத்தான்
விரவிப் பிடித்ததென் ஞானப் பெண்ணே. (39)

யேசுவைத் தேவனென் றஞ்ஞானத் தாலே
யிசைக்கிற வார்த்தையைப் பொய்யென் றுணர்த்தி
யோசைசேர் யூதர்கள் சாட்சிக ளாகி
ஒருங்கு கழறுவர் ஞானப் பெண்ணே. (40)

யேசுக் கிறீஸ்து படும்வே தனையினுல்
எல்லார்க்கு முத்தி வழிவந்த தேலந்த
யேசுக் கிறீஸ்து பிறக்குமுன் மாண்டவர்க்
கேது கதியாகும் ஞானப் பெண்ணே. (41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்றிடும் யேசுவின் மானுடத் தன்மை
யுலகத்தி லேமிகு வேதனைப் பட்டிட
மற்றவர் தேவத் துவமிரட் சிக்கும்
வகையேது சொல்லேடி ஞானப் பெண்ணே. (42)

யேசுவின் மேற்பரி சுத்தாவி வந்தன்
றிறங்கி யுறைந்ததென் றுலந்த வாவியும்
யேசுவு மொன்றல்ல வேறென் றியாரும்
இனிதி னுணராரோ ஞானப் பெண்ணே. (43)

அநதகா லத்தினைத் தந்தையே யல்லாமல்
யாருஞ் சுதனு மறியமாட் டாரென்று
முந்த வுரைசெய்தால் யேசுக் கிறீஸ்துவும்
முற்றறி வாளனோ ஞானப் பெண்ணே. (44)

மாதா வயிற்றில் மலங்கிக் கருக்குழி
வாய்பட்டுத் தோன்றி வருந்திச் சிலுவையில்
தீதாய் மடிந்த நரனைப் பிரானென்று
செப்பும் பிராந்தியென் ஞானப் பெண்ணே. (45)

## ச. பரிசுத்தாவி இயல்பு

### கலிவிருத்தம்

சுத்தி செய்வது தொல்லுயிர் கட்கருட்
சத்தி யேயெனுஞ் சத்தியந் தேர்கிலார்
சுத்த வாவியே சுத்தி செயுமெனக்
கத்தும் வார்த்தையைக் கண்டித் திடுவனே.

வானி லிருந்து பரிசுத்த வாவி
வயங்கும் புறப்போல யேசுவின் மேல்வந்த
தானுற் பரிசுத்த வாவி யருவமென்
றுங்கவர் சொல்வதென் ஞானப் பெண்ணே. (46)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கினி நாக்க ளெனப் பரிசுத்தாவி
அப்போத் தலருக்கு வந்ததென் றுலினி
மிக்க வடிவுடைத் தவ்வாவி யென்று
விளம்பவும் வேண்டுமோ ஞானப் பெண்ணே. (47)

விண்ணி லிருந்து பரிசுத்த வாவி
வியன்புற வாய்வந்த தேசுவை யூதர்கள்
மண்ணில் வருத்தும் பொழுது விலகி
மறைந்து பறக்கவோ ஞானப் பெண்ணே. (48)

## ரு. சீவனியல்பு

### கலிவிருத்தம்

ஓவலில் சைவநூ லுணர்த்து முண்மையாம்
சீவலட் சணந்தனைச் சிறிதுந் தேர்கிலாப்
பாவிசண் மலைவுறப் பகர்ந்த நூலினுட்
சீவனி னியல்பினிச் செப்பு வாமரோ.

சீவர்கள் யாவருந் தேவனுற் றேன்றினர்
திண்ணமி தென்கிறர் தோன்றிய வஸ்துக்கள்
ஓவாது நித்திய மாமோ வவர்க்கிந்த
உண்மை தெரியாதோ ஞானப் பெண்ணே. (49)

தொல்பிறப் பில்லை பிறந்திறந் தான்மறு
தோற்றமு மில்லையென் றேதுகிறர் சீவர்
எல்லாரை யுஞ்சம மாகப் படையாத
தெந்த நிமித்தத்தால் ஞானப் பெண்ணே. (50)

ஆதி மனித ரியற்றிய பாவத்தால்
யாவரும் பாவிக ளாயின ரென்கிறர்
ஓதி லொருவர்செய் பாதகம் தான்மற்
றொருவரைச் சேருமோ ஞானப் பெண்ணே. (51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீத்திய சிவன் விலங்காதி கட்கில்லை
நிச்சய மென்று நிகழ்த்து கிறாரவர்
இத்திறந் தன்னை யறிந்தசெவ் வாறென்
றியம்புவ ரோசொல்லு ஞானப் பெண்ணே. (52)

## ௬. கிரியை இயல்பு

### கலித்துறை

ஞானம் பயக்கும் கிரியைசெய் வீரென்று நாடருமெங்
கோனன்பிற் கூறிய தோரா நிகழும் கொடியர்கொண்ட
ஊனம் படும்பொய் விவிலிய புத்தகத் தாடுரைத்த
ஈனந் தருந்தூர்க் கிரியையை யானிங் கியம்புவனே.

சாற்றுங் கிரியை விதியைப் பராபரன்
தானே விதித்துச் சதாகா லமுமிதைப்
போற்றி யநுட்டிக்கு வீர்கதி யுண்டென்று
போதித்தான் காணேடி ஞானப் பெண்ணே. (53)

ஆசா ரியரால் வரும்பய னேதென்
றலறுகி றாரந்த லேவியர் கூட்டத்தை
ஆசா ரியராகத் தேவ னியமித்
தபிடேகஞ் செய்தனன் ஞானப் பெண்ணே. (54)

சுத்தியே னென்கிறார் கர்த்தன்முன் னாரோன்
சுதரை முழுகிப்பின் சால்வை யலம்பிமெய்ச்
சுத்தியா கிக்கோயி லுட்புகு வீரென்று
சொல்லிய தோராரோ ஞானப் பெண்ணே. (55)

ஆசௌச மென்பிரா யச்சித்த மென்னென்
றாற்று கிறார்மோசே கற்பித்த புத்தகம்
ஆசௌச முண்டுபி ராயச்சித்தம் முண்டென்
றுங்கே னுரைத்தது ஞானப் பெண்ணே. (56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்த்தத்தா லங்கத்தி லூத்தைபோம் வேறென்ன
சேரும் பயனென்பர் கிள்ளித் தெளிக்கிற
தீர்த்தத்தா லல்லவோ ஞானஸ்நா னம்மென்று
தீவினை தீர்ப்பது ஞானப் பெண்ணே. (57)

நாகமான் குட்ட வியாதியை யோர்தான்
நதிப்புன லாடியே மாற்றின னென்பவர்
ஓகையாய்த் தீர்த்தங்க ளாடுவா ரைப்பழித்
தோதுவ தென்னேடி ஞானப் பெண்ணே. (58)

மாட்டுக் கடாரி யெருச்சுட்ட சாம்பரை
வாரிக் குவிபவம் போமென்ற வாக்கியம்
ஏட்டிற் பதிந்துகொண் டார்திரு நீற்றை
இகழுவ தெப்படி ஞானப் பெண்ணே. (59)

முன்னே பான்பன் மணப்பொற் பதக்கநன்
முத்திரை யுத்தரீ யத்தோ டிடுமென்று
சொன்ன தறியாரோ கண்டிகை யேயென்று
சொல்லுவ தேதேடி ஞானப் பெண்ணே. (60)

அப்பமு டன்மது யேசுவின் தேகத்தோ
டாகு முதிரத்தின் முத்திரை யாமென்று
செப்பிடு வோர்தேவ முத்திரை யேதென்று
செப்புவ தெப்படி ஞானப் பெண்ணே. (61)

புண்ணிய காலமென் றோதுவ தென்ன
புதுமையென் றோதிப் புலம்புகின் றாரவர்
நண்ணிய வெள்ளியும் ஞாயிறும் புண்ணிய
நாளென்று கொள்வதேன் ஞானப் பெண்ணே. (62)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்ணிய மான தலமென்ப தேது
புகலுமென் பார்முன் பராபரன் கட்டளை
பண்ணிய வந்த வெருசலேம் மோக்ஷ
பதியென்ப தேதேடி ஞானப் பெண்ணே. (63)

சேரும் பரனைமுன் மோசே தரிசனை
செய்துழிப் புண்ணிய பூமியி தாமிங்கு
வாரேல் செருப்பைக் கழற்றென்று தேவன்
வகுத்த தறியாரோ ஞானப் பெண்ணே. (64)

எண்ணெயைப் பூசிச் செபஞ்செய்யில் நோய்பவம்
இல்லையென் றேசொல்லும் புத்தகம் பார்த்தவர்
புண்ணிய நீறணிந் தேசெபஞ் செய்வது
பொல்லாத தென்பதேன் ஞானப் பெண்ணே. (65)

யூதர் படைவெல்ல யெரிகோ பட்டணம்
ஒக்க விடிந்திட யோர்தா னறிவற்ற
ஆறியி லேநற் பிரதிமை தான்செய்த
தற்புத மல்லவோ ஞானப் பெண்ணே. (66)

மேலான கோயிற் பிரதிட்டை யேனென்று
வீண்பழி சொல்வார் சலோமோ னெனும்வேந்தன்
ஆலயங் கட்டிப் பிரதிட்டை செய்த
தறிகில ரோவெடி ஞானப் பெண்ணே. (67)

யேசுவு முன்னே யெருசலே மென்னும்
இடத்தில் விழாத்தெரி சித்தது தோமற்
காசினி மீது விழாத்தரி சிப்பாரைக்
கண்டு நகைப்பதேன் ஞானப் பெண்ணே. (68)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைவிளக் காலயத் தேற்றுத லாரோன்
கடனென்று கர்த்தன்முற் கற்பித்த தோராமல்
நெய்விளக் காலயத் தேற்றுவார் தங்களை
நிந்தித் துரைப்பதென் ஞானப் பெண்ணே. (69)

கல்லுக்கே வெண்ணெய்நெய் பால்தயிர் தானென்று
கத்துகி றார்மோசே யாத்திரா புத்தகம்
சொல்லிய தாலபி ஷேக மகாபரி
சுத்தமென் றல்லவே ஞானப் பெண்ணே. (70)

கற்பல கைப்பெட்டிக் கர்ச்சனை செய்யென்று
கர்த்தன்முன் மோசேக்குக் கற்பித்த துண்டெனிற்
நற்பூசை செய்வாரைக் கண்டு பழித்து
நகைத்துத் திரிவதென் ஞானப் பெண்ணே. (71)

அப்ப மதிரச மாதிய பீடமுன்
ஆகவைப் பாயென்று மோசேக்குத் தம்பிரான்
செப்பின தில்லையோ மற்றவ ரிப்படிச்
செய்வது பாவமோ ஞானப் பெண்ணே. (72)

குப்பைசெய் தன்னம் பழம்படைத் தேசைவர்
கும்பிடல் குற்றமென் றோதுகி றாரவர்
அப்பம ரக்குவைத் தாசீர் வதித்துண்ப
தார்க்கு நைவேத்தியம் ஞானப் பெண்ணே. (73)

சொல்லிய வாபிர காம்வீட்டி லான்கன்றைச்
சுட்டுத்தின் றான்கர்த்த னென்ப தறியாமல்
நல்லநை வேத்தியம் வேண்டான் பரனென்று
நாடி நவில்வதென் ஞானப் பெண்ணே. (74)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாட்டாங்க மாக நமஸ்காரஞ் செய்வது
தக்கதன் றென்பார் முழங்காலைப் பூமியில்
மாட்டிக்கண் மூடிக்கை நீட்டி விரித்து
வருந்துவ தென்னேடி ஞானப் பெண்ணே. (75)

ஊனுறக் கம்விட்டு மாதவஞ் செய்வதில்
ஒன்றும் பயனில்லை யென்கிறு ரேயது
வீணெனில் யேசுமுன் நாற்பது நாளுண்டி
விட்டேன் றவஞ்செய்தான் ஞானப் பெண்ணே. (76)

கெட்ட சவத்துக்குச் செய்திட வேண்டும்
கிரியையுண் டோவென்பர் தங்கள் சவங்களை
பெட்டகத் திட்டு முழங்காலி னின்று
பிதற்றிப் புதைப்பதென் ஞானப் பெண்ணே. (77)

சோதிடம் பொய்யென் கிறுர்மரி யாளோர்
சுதனைப்பெற் றுளென்று தாரகை யென்றினுற்
சோதிடர் சேர்ந்து தொழவந் தனரென்று
செல்லுவ தெப்படி ஞானப் பெண்ணே. (78)

## எ. நரக இயல்பு

### வெண்பா

ஆதிபரன் முன்னு ளருளியவே தாகமத்தில்
ஓது நரகினியல் போராத—நீதியிலாப்
பொல்லார்செய் பொய்ந்நூல் புகன்ற நரகவியல்
பொல்லாமை சொல்வே னுவந்து.

நித்திய வேதனை யெய்துவர் சீவர்
நிரயத்திற் றீவினை யாலென்பர் சீவர்மேல்
வைத்த பகையாலே நித்த நரகத்தில்
வைப்பது தற்பரன் ஞானப் பெண்ணே. (79)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கினி கந்தகங் கிடம் முதலாம்
அநித்த பதார்த்தங்க ளுற்ற நரகத்தை
மிக்கதோர் நித்த நரகமென் றோதும்
விதமேது சொல்லேடி ஞானப் பெண்ணே. (80)

## அ. முத்தி இயல்பு

### கோச்சகக்கலிப்பா

ஒப்பிலதாஞ் சிவநூலி லுணர்த்தியவீட் டியல்பதனை
தப்புறவுய்த் துணராதோர் சமைத்தவிவி லியநூலில்
செப்பியதோர் வீட்டியல்பு திருந்தாது திறம்புமுறை
இப்படியி னுறைவோர்க ளினிதுணர விசைப்பேனே.

முந்நான்கு வாயில் மதில்திருக் கோபுரம்
முன்னிய மண்டப வீதி நதிமணி
பொன்னுர் தருங்கனித் தாரு முதல
பொருந்திடம் முத்தியாம் ஞானப் பெண்ணே. (81)

முத்தியு மோரிட மாமதி லேவைகும்
முத்தருந் தேக முடைய வராம்
நித்திய மாமிந்த முத்தி யிதற்கு
நியாயமு முண்டாமோ ஞானப் பெண்ணே. (82)

முத்தியின் மேவினர் தங்களி லேசிலர்
மோகபி சாசாகி விட்டா ரெனிலதை
நித்திய பேரின்ப வீடெனும் புத்தகம்
நீதிக்கு மெய்யாமோ ஞானப் பெண்ணே. (83)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூ. மோசே முதலியோர் இயல்பு

### ஆசிரியவிருத்தம்

மெய்யனு மிலேச்சர் கொண்ட விவிலிய நூலைத் தீட்டி
வையக மதனின் மூடர் மயங்கிட வுபாய நாட்டிப்
பொய்மதந் தோன்றச் செய்த புல்லராம் மோசே யாதி
கையழி வில்லா மாக்கள் காதையிற் சிலசொல் வேனே.

மோசேயென் போனுதி புத்தகந் தந்த
முதற்குரு வென்று பிதற்றுகி றாரந்த
மோசே நரவதை செய்தவன் மாபாவி
மூர்க்கனி டம்பன்காண் ஞானப் பெண்ணே. (84)

தாவீது சங்கீத புத்தகஞ் செய்தருள்
சற்குண னென்கிறா ரூரியா வென்போனைத்
தாவீது தானே வதைப்பித் தவனுடைத் [ணே.
தாரத்தைக் கைக்கொண்டான் ஞானப் பெண் (85)

முற்சலோ மோனெழு நூறுதா ரங்களை
முந்நூறு காமக் கிழத்தியர் தங்களைப்
பற்றிப் புணர்ந்து பாசம யத்திற்
படர்ந்தனன் காணேடி ஞானப் பெண்ணே. (86)

செத்த சவத்தைப் பிழைப்பித்த தேவியா
தேகத் தெலும்பென்று கத்துகி றாரதை
வைத்திருந்த வுடல் செத்ததென் றூற்பின்னை
மற்றதும் பொய்யாமே ஞானப் பெண்ணே. (87)

ஓதுங் கிறீஸ்துவை நானறியே னென்
றுரைத்துப்பொய் முக்காலு மோடிப் பதுங்கின
பேதுரு வென்போனை யப்போஸ் தலனென்று
பேணுவ தெப்படி ஞானப் பெண்ணே. (88)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதகஞ் செய்து பலர்மணி யாடை
பறித்துத் திரிந்த பவுலெனுந் துட்டனை
மேதகு சீடனென் றேசு தெரிந்த
வியப்பென்ன வோவேடி ஞானப் பெண்ணே. (89)

முன்னே பவுல்கட்டுங் கச்சுத் துணிபிணி
மோசனஞ் செய்ததென் றூரவா ரிக்கிறார்
என்னென்று சொல்லுவேன் கச்சுத் துணிக்கங்
கிருந்த மகத்துவம் ஞானப் பெண்ணே. (90)

மத்தனும் லுத்தேர் சமயத் துரோகி
மதிகெட்ட காமுக னென்றேகத் தோலிக்க
சுத்த விரத்தர்க ளெல்லாருஞ் சாக்கியஞ்
சொல்லுகி றாரேடி ஞானப் பெண்ணே. (91)

## கo. கிறீஸ்தவர் இயல்பு

### ஆசிரியவிருத்தம்

மிக்கபல பொய்மலிந்த விரோத மோங்கும்
விவிலியபுத் தகமதனை மெய்யென் றெண்ணி
தக்கபல வாக்கியமுஞ் சேர்த்துப் பின்னுந்
தமக்கிசைய வுரைகளுஞ்செய் தெழுதிக்கொண்டு
புக்கபல விடத்துமதைப் பிதற்றித் தாமே
புசிப்பதற்குப் பொருள்கவரு மிடம்ப ராங்கீழ்
மக்களெனுங் கிறீஸ்தவர்தம் மியல்பின் யானும்
மதித்தறிந்த வகைசிறிது வகுக்கு வேனே

பூதல மீதிலே எங்கள் விவிலிய
புத்தக மொன்றுமே சத்திய மென்றுவீண்
வாதுக்கள் செய்து திரிகின்ற மூடர்தம்
மார்க்கமி தென்னேடி ஞானப் பெண்ணே. (92)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசைகண் மூன்றையுந் தள்ளினன் முத்தியுண்
டாமென்ற வாக்கியங் கண்டிருந் தும்வெகு
காசு திரட்டிப்பெண் டாட்டியைக் கைவிடாக்
கள்வர்க்கு முத்தியோ ஞானப் பெண்ணே. (93)

மண்ணாசை யாகாது காணியெல் லாம்விற்று
வாய்த்த தருமங்கள் செய்யுமென் பாரவர்
மண்ணாசை யாலே பலபல காணிகள்
வாங்கிக்கொண் டாரேடி ஞானப் பெண்ணே. (94)

வட்டியை வாங்குதல் குற்றமென் றேதேவ
வாக்கியஞ் சொல்லவும் பாக்கியந் தேடவே
வட்டியை வாங்குகி றார்நீதி விட்டிதிம்
மார்க்கத்திற் கேற்குமோ ஞானப் பெண்ணே. (95)

ஆண்டவர் கற்பனை காண்பா தாரத்தை
அங்கையாற் றீண்டலுங் காண்டலுந் தீதென்பர்
வேண்டிய பெண்கள்கை கோத்துத் தழீஇக்கொண்டு
வீதி திரிகிறார் ஞானப் பெண்ணே. (96)

மாசார் மலத்தை விடுத்துக் குதத்திடை
மண்ணிட்டு நீர்கொண்டு சௌசஞ்செய் யாதவர்
தேசிக ராம்பரி சுத்தரு மாமினிச்
செப்புவ தேதேடி ஞானப் பெண்ணே. (97)

வல்வேடத் தார்க்கைப் பணக்கண்ணி குத்தி
மனுப்பட் சிவாரி நரகத் தடைக்கிறார்
புல்வேடக் காரர் குருவி பிடிப்பது
போலேயன் றோவேடி ஞானப் பெண்ணே. (98)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் விவிலிய புத்தகத் துள்ள
விரோதத்தைக் கேட்கில் விடையொன்றுஞ் சொல்லா
ஆண்டவர் செய்ததற் காரென்ன செய்வதென் [மல்
றூற்றுமற் சாற்றுவர் ஞானப் பெண்ணே. (99)

தாங்க ளனுட்டிக்கு மார்க்கத்தி லுள்ள
தலைதடு மாற்றஞ் சமஞ்செய்ய மாட்டாமல்
ஆங்குப் பிறர்மார்க்க மாராய்ந்து பார்க்கும்
அவசர மேதேடி ஞானப் பெண்ணே. (100)

ஆயுந்தம் மார்க்கத்தி லுள்ள நவைகள்
அடங்க மறைத்துப் பிறர்நவை பேசுதல்
தாயைப் பழித்து மகள்வேசை யாகிய
தன்மைபோ லாகுமே ஞானப் பெண்ணே. (101)

தண்ணீரா லப்போஸ் தலர்நான மெய்தாமை
தங்கள் விவிலிய நூலே விலக்கவும்
தண்ணீரா லிங்கிவர் ஞானஸ்நா னஞ்செய்தல்
தான்மா று பாடன்றோ ஞானப் பெண்ணே (102)

சொல்லும் விவிலிய புத்தகத் தோதிய
தொல்லோய்வு நாள்சனி வாரத்தைத் தள்ளியே
மெல்ல ஞாயிற்றினை யோய்வுநா ளாக்கும்
வியப்பென்ன வோவேடி ஞானப் பெண்ணே. (103)

தண்ணீரின் மூழ்குதல் ஞானஸ்நா னம்மென்று
சாற்றிய வாசகம் பார்த்திருந் தும்மவர்
தண்ணீரின் மூழ்காமற் கிள்ளித் தெளிப்பது
தப்பல்லவோ செப்பு ஞானப் பெண்ணே. (104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாராயங் கள்ளுக் குடிப்பது தான்மிகத்
தப்பென் றுபதேசித் தொப்பிக்கி றாரவர்
சாராயந் தானே தருமுத்தி யென்றெண்ணித்
தாங்கள் குடிக்கிறார் ஞானப் பெண்ணே. (105)

தன்னை வணங்கார்தஞ் சந்ததி நான்கு
தனையும் பரன்சீறித் தண்டிப்பா னென்றிடில்
அந்நிலை நில்லாரை மார்க்கத்திற் கூவி
அருநர குய்ப்பதென் ஞானப் பெண்ணே. (106)

அப்பத்தி னோடு மதுவைக் கிறீஸ்துவின்
ஆகத் தசையோ டிரத்தமாய் பாவித்து
செப்புந்தந் தெய்வத்தைத் தின்கிறார் வேறென்ன
தின்னமாட் டாரோடி ஞானப் பெண்ணே. (107)

பேணக் குருமார்கள் தக்கிணை யேற்பது
பேதைமை யென்றெங்கும் போதிக்கி றாரவர்
காணிக்கை யேசுக் குருவுமுன் வாங்கிய
காரியந் தேராரோ ஞானப் பெண்ணே. (108)

சீருற்ற பற்பல தன்மங்கள் தானங்கள்
செய்கின்றோ மென்றெங்குந் தீட்டிவிட் டுக்காட்டிப்
பேருற் றிடப்பண்ணித் தாங்கள் வெகுபொருள்
பெற்றுக்கொண் டாரோடி ஞானப் பெண்ணே. (109)

மானுடர் தின்னப் படைத்தான் விலங்குபுள்
வர்க்கத்தை யீசனென் றோதுகி றாரவர்
மானுடர் தம்மை யவைகளுந் தின்றலின்
மாறிப் படைத்தாரார் ஞானப் பெண்ணே. (110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல சுவையான மாமிச மாதலின்
நாமிரு கங்களைக் கொல்கின்றோ மென்றவர்
சொல்லி விடாமற் பராபரன் மேற்பழி
சூட்டவும் வேண்டுமோ ஞானப் பெண்ணே. (111)

புட்குத்திக் கொன்று விலங்கை வதைத்துப்
புசிக்கிறார் தங்கள் பசிக்கு ருசிக்கவே
முட்குத்தி நொந்தறி யாரோ வவருக்கு
மோக்ஷமுண் டோவேடி ஞானப் பெண்ணே. (112)

தேடிக் குருக்களைத் தன்னயத் துக்காகச்
சிஷன் பிடிப்பது வேமுறை தேசிகர்
தேடிப் பணங்கொடுத் தாட்பிடித் தால்முத்தி
சேர்ப்பதெவ் வாறேடி ஞானப் பெண்ணே. (113)

உள்ளொன்ற தாகப் புறத்தொன்று காட்டி
உபாயத்தால் மூடிய பாயத்தைச் செய்கின்ற
கள்வர்தாங் கொண்ட விடம்பத்தை யாவருங்
காண்கில ரோவேடி ஞானப் பெண்ணே. (114)

கொல்லும் பிறச்சம யங்களி னின்றவர்
சோற்றுக்கும் சீலைக்கு மிந்தப்பொய் மார்க்கத்தைப்
புல்லிக்கொண் டாரென்ப தற்கொரு சான்று
புகலவும் வேண்டுமோ ஞானப் பெண்ணே. (115)

ஆதியா யோதிக்கு மோதியாய்ப் பூதங்கள்
ஐந்தாய்ச் சராசர மாயள வற்றிடுஞ்
சோதியாய் நின்ற பரசிவன் பாதமே
துத்தியம் நித்தியம் ஞானப் பெண்ணே (116)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யேசுமதபரிகாரம்

சீர்மேவுஞ் சர்வஞ்ஞ தாதிசாட் குண்ணியஞ்
சேர்ந்திடுஞ் சிவனேகனை
திகழகில லோககா ரணனாதி குருமூர்த்தி
திவ்யபர மார்த்தனென்று
நேர்மேவு சிவனாதி காலத்தி லருள்செய்த
நிகமாக மங்கள்சொலவும்
நிகரறு மகான்கணல் லனுபூதி மான்களிது
நிச்சயமெனக் கழறவும்
ஏர்மேவு தர்க்காதி பலசாத் திரக்கடல்க
ளெல்லாங் கடந்தபுலவோர்
இதுமெய்ம்மை யிதுமெய்ம்மை யென்றுறுதி கூறிடவு
மிவையெலாந் தெளியாமலே
பார்மேவு சிலமூடர் யேசுவெனு நரனையொரு
பரனென்று சொலும்வார்த்தையைப்
பற்றுது நரர்விலகி யுய்யவே யேசுமத
பரிகார முரைசெய்வேனே. (1)

உள்ளத்தி னுணர்வுள்ள மிலேச்சர்தஞ் சமயநிலை
யொருசிறிது முணர்கிலாரோ
உறுமோசே புத்தக மிரண்டிலிரு பதினுமதி
உற்றமுப்பா னான்கினுங்
கொள்ளத் தகுநான்கி னுற்றபதி னான்கினுங்
கூறைந்தி னோரைந்தினுங்
கூறியிடு நான்குசங் ததிவரையி னுந்தந்தை
கொடுவினைகள் யாவையெனினுங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தள்ளற் குடன்படான் கொடியதோ ரெரிச்சலொடு
தண்டிப்பனு மெனவுமேற்
தந்தைபிழை மைந்தரைத் தொடருமென வும்பரன்
சாற்றினது சத்யமானல்
அள்ளிப் பணங்கொடுத் தாளேன் பிடிக்கிரு
ரவர்வார்த்தை கேட்பதறிவோ
அமலபூ ரணசுத்த சச்சிதானந்தமய
மாஞ்சிவனை யறிவதறிவே. (2)

கணவனுடன் வாழவுங் கன்னியா மவளையக்
கணவன் ருெடா திருக்கக்
கர்த்தனு லொருமகவு பெற்றதாம் பெற்றதூஉங்
காட்டுமாட்டுத் தொட்டிலில்
இணையினங் குலமார்க்க மழியுமிம் மகவினு
லென்றவன் குலவாசனே
டெல்லாரு மாராய வப்பா லொளித்திட்ட
விவனையொரு சீடனுற்ற
துணையென விருந்தவன் கைக்கூலி யால்வந்த
சோதனைச் சேவகர்க்குச்
சொல்லிக் கொடுக்கவவர் கொல்லப் படும்யேசு
துணைசெய்சற் குருவென்கிருர்
அணுவளவு மிதினுண்மை காணவழி யில்லையே
யவர்வார்த்தை கேட்பதறிவோ
அமலபூ ரணசுத்த சச்சிதா னந்தமய
மாஞ்சிவனை யறிவதறிவே. (3)

நல்லப்பை மதுவாக்கி மிகுபேய்களைப் போக்கி
நாடுகடன் மேனடந்து
நவில்பெரும் பாடுகுட் டஞ்சன்னி பாதமொடு
நலிசுரம் முதனேயெலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லிற் றிலைத்தான் கிறீஸ்துமுன் னென்கிலது
துட்டர்கள் கண்கட்டுவித்தைத்
தொழில்போ லிருந்ததே தன்மரபின் யூதராற்
சோரக் கிறீஸ்துவென்றே
கொல்லப் படும்போது தனையிரட் சித்துக்
கொளாதவன் பிறருக்குறுங்
குறைதவிர்த் திடுவனோ விவன்பிதா வேயென்று
கூவென்று குளறியழுதே
அல்லற் படுங்கொலோ சற்குரு வெனும்பொருளு
மவர்வார்த்தை கேட்பதறிவோ
அமலபூ ரணசுத்த சச்சிதா னந்தமய
மாஞ்சிவனை யறிவதறிவே. (4)

தனியீச னரரைப் படைத்தது தனைத்தொழத்
தன்மகிமை தோன்றவெவருந்
தனைவேண்ட வென்கிலொரு பாபபுண் ணியமனுடர்
தஞ்செயலில் வந்ததிலையே
மனநீதி யில்லாம லவர்களிற் சிலரோங்கி
வாழவுஞ் சிலர்தாழவும்
வைப்பனோ நடுநீதி யிப்படிச் செய்வதோ
மற்றவரில் வைரமுளனோ
இனியா ரிதைக்கேட் டிரங்கியரு ளுங்கடவுள்
யேசுவோ தேவகிருபை
இல்லையொரு மனிதனது வல்லமையி னுல்முத்தி
யேறலாம் மென்கிறாரே
அநியாய வழியிந்த வழிபோல வில்லையே
யவர்வார்த்தை கேட்பதறிவோ
அமலபூ ரணசுத்த சச்சிதா னந்தமய
மாஞ்சிவனை யறிவதறிவே. (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பனைசெய் பானுயிர் படைத்தவுட னேநரகு
காட்டிவிட யேசுவவர்தங்
கன்மமது கைக்கொண்டு தன்னுயிர்ப் பலியீந்து
காத்ததெனின் மரியையுதாத்
துற்பவ முதற்றெருட் டொளித்துத் திரிந்தவனை
யோர்ந்துபரி சேயருக்கே
உளவுயூ தாச்சொல்ல வொருமனையி னுட்பற்றி
யூதர்கள் பிலாத்துவென்னுஞ்
சொற்பெறு துரைக்குமுன் விடவவன் கொல்வித்த
துறையினாற் பலிகொடுத்தற்
றெழினிரப் பினவர்க ளோயேசு வோவென்று
தூக்கியது பார்க்கலாமே
அற்பவிசு வாசிகளி தறியாம லிலைகிரு
ரவர்வார்த்தை கேட்பதறிவோ
அமலபூ ரணசுத்த சச்சிதா னந்தமய
மாஞ்சிவனை யறிவதறிவே. (6)

எண்ணுற்ற யூதமத முறழ்யேசு மதமோ
டியம்புரோ மன்சமயமே
இகலுங் கிரேக்கமத மிழிபுரோ டெஸ்டான்
டெனுஞ்சமய மாமிவையெலாம்
நண்ணுற்ற கடவுளும் முதனூலு முற்பவமு
நவில்பிறவு மொன்றுகவும்
நாடிலொன் றினையொன்று பொய்யென மறுத்தோதி
நவையுரைக்கின்ற தேதோ
பண்ணுற்ற தொருதருவி லுறுபழத் துள்ளசுவை
பலபழச் சுவையாகுமோ
பகருமிவர் தம்முட் பகைத்திகழின் னெம்மதம்
படிறில்ல தெனநம்பலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணனைத் தம்பியுன் னப்பனு றென்றனிக
ரவர்வார்த்தை கேட்பதறிவோ
அமலபூ ரணசுத்த சச்சிதா னந்தமய
மாஞ்சிவனை யறிவதறிவே. (7)

முடிவிலாக் கடவுடான் மோசே முதலோருக்கு
முன்சொன்ன முதுசாத்திரம்
முழுவதும் பழுதென்கி றுரொரு மாத்தினது
மூலவேர் பழுதுபட்டால்
இடையிலே வந்தகொம் புய்யுமோ விவர்களு
ளிசைபெற்ற மூவாயிரத்
தேறுநூற் றென்றதாங் கலியாண்டு தன்னிலே
யிழிமரியை பெறும்யேசுவாற்
படிறுலாம் யேசுவின் சீடரால் வந்ததொரு
பாங்கில்புது நூலாமதைப்
பழுதின்மெய் நூலென்று நம்பிநா கக்குழி
படர்ந்திடப் பலரைமூட்டி
அடியிலாப் புணையேறி நெடியகடல் போகிறுர்
அவர்வார்த்தை கேட்பதறிவோ
அமலபூ ரணசுத்த சச்சிதா னந்தமய
மாஞ்சிவனை யறிவதறிவே. (8)

மங்கையா மரியைக்கு மணவாளன் யோசேப்பு
மைந்தர்சில ரவரின்மூத்த
மகவினுக் கொருபாதி தெய்வத்வ மொருபாதி
மானுஷிய மெனிவிரண்டு
பங்கிலே யொருபாதி மயனுக்கு மொருபாதி
பரிசுத்த வாவிக்குமுற்
பவமான வோசுட்ட மண்ணுடன் பச்சைமண்
பரிசிக்குமோ புருப்போல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்குவே ளொருசுத்த வாவிவந் தேசுவோ
டியைந்ததென் றெய்வத்துவம்
இடருழந் தறையுண் டிறக்குமோ மானுஷிய
மியல்புட னிரட்சிக்குமோ
அங்கமொன் றுற்பவ மிரண்டென் கிறார்களே
யவர்வார்த்தை கேட்பதறிவோ
அமலபூ ரணசுத்த சச்சிதா னந்தமய
மாஞ்சிவனை யறிவதறிவே. (9)

ஊர்நம்ப வில்லையய லார்நம்ப வில்லையவ
னொருமாபி னொருமதத்தோர்
யூதர்நம் பவுமில்லை யுற்றசுற் றத்தோரு
முளமருள் பொருந்தினோனென்
பார்நம்ப விலைபிசா சுகளினது தலைவனைப்
பற்றியது கற்றதென்று
பலர்நம்ப வில்லைமுற் பரிசேயர் பாடகர்
பகர்ந்தவா சாரியரெனும்
பேர்கொண்ட வவர்நம்ப விலைபிலாத் தொடுமேப்பர்
பின்னையும் நம்பவில்லை
பேயும் பிடித்ததென் றேவாக்கி யங்கள்பல
பேசவும் யேசுவைத்தான்
ஆர்நம்பு வாரவனை நீர்நம்பு மென்கிறு
ரவர்வார்த்தை கேட்பதறிவோ
அமலபூ ரணசுத்த சச்சிதா னந்தமய
மாஞ்சிவனை யறிவதறிவே. (10)

மோசேபா னைக்கண் டுடன்பேசி யவன்வாக்கு
மூலமாய்ச் சமயமுறைமை
முழுதுமெழு தியுமர்த்த மறியவிலை யோவவன்
முறைப்படி நடந்தவர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யேசுவுஞ் சீடர்களு மப்பொரு ளறிந்திடவு
மில்லையோ லுத்தேர்கல்வின்
என்னுமிவ ரிருவரோ வுண்மையாம் பொருளறிந்
தெழுதினவ ரிவர்கண்முன்னே
பேசுமவர் யாரினும் பெரியரோ ரோமான்
பெயர்ச்சபையி னோரிவர்களைப்
பேய்கொண்டு பெண்ணாசை நோய்கொண்ட சமயப்
பிரட்டரென் றெழுதிவைத்தார்
ஆசுமிக வுறுகுதர்க் கப்பறை யடிக்கிறார்
அவர்வார்த்தை கேட்பதறிவோ
அமலபூ ரணசுத்த சச்சிதா 'னந்தமய
மாஞ்சிவனை யறிவதறிவே. (11)

பெரியரோ மான்சபையி னிற்குருத் தன்மையைப்
பெறவேண்டி யாசைமூன்றும்
பேணாது நீங்கிமுன் றுறவியா கிப்பின்பு
பெண்ணாசை கொண்டுமுன்செய்
உரியசத் தியநியம மும்பொய்த்து நிலைகெட்ட
லுத்தேர்திருத்து புதுநூல்
உண்மையா மெனின்முன் பராபரன் சொன்னபடி
யொழுகியருள் பெற்றதீர்க்க
தரிசிக ளெலாம்பொய்ய ரோபுத்தி கேடரோ
தங்கண்முது நூல்பொய்த்ததோ
சாற்றரிய காமவெறி கொண்டலுத் தேரெனுஞ்
சடனுமொரு கடவுளேயோ
அரியசற் சமயவியல் பறியாம லலைகிறா
ரவர்வார்த்தை கேட்பதறிவோ
அமலபூ ரணசுத்த சச்சிதா னந்தமய
மாஞ்சிவனை யறிவதறிவே. (12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டிமைத் தீர்க்கதரி சிகள்வருவ ராராய்ந்து
பாருங்க ளென்றவாய்மைப்
படியவர்க ளின்னமும் வந்திலர்க ளோவந்து
பாழ்நரகி னிற்புகுந்து
விட்டனர்க ளோநிகழு மிக்கால மாரீச
வேடராய் வந்துமுன்சொல்
மெய்ந்நூ லையுந்தேவ விகிதத்தையுந் தள்ளி
மெய்யென்று பொய்யுரைகளைப்
கட்டிநின் றலைகிறு ரோரோமை யார்தேர்ந்து
கள்வரென் றெழுதலுத்தேர்
கல்வின்கொ லோவவர்கள் மாயையி னகப்படிற்
கனமோச மாகவருமே
அட்டிலிற் புலிசூடு பட்டதென வேதிரிவ
ரவர்வார்த்தை கேட்பதறிவோ
அமலபூ ரணசுத்த சச்சிதா னந்தமய
மாஞ்சிவனை யறிவதறிவே. (13)

மாற்குமுறை பத்தினும் மத்தேயு பத்தொன்ப
தாறினு முதற்கொரிந்தி
மருவேழி னும்பழைய பிரசங்கி புத்தகம்
வந்திடுமிரண்டு தனினுந்
தீர்க்கமிகு லூக்காமுன் நான்குபதி னூன்குடன்
றிகழெண்ணி ரண்டுபதினெண்
சேரத்தி யாயங்க ளினினும்வே றிடத்தினுந்
திரியாசை யுடையர்முத்தி
மார்க்கமுற லரிதரிதெ னச்சொன்ன தோர்ந்துமவர்
மண்ணாசை பொன்னாசைபெண்
மருவாசை யென்னுந்து ராசைகளை நீக்கிலார்
மருவுதந் நிலையயன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார்க்குமே முத்திவழி வேறில்லை யென்கிருர்
 ரவர்வார்த்தை கேட்பதறிவோ
அமலபூ ரணசுத்த சச்சிதா னந்தமய
 மாஞ்சிவனை யறிவதறிவே. (14)

நல்லபரன் மோசேக் குரைத்ததிக் கிரியைபலி
 நாளுநீர் செய்யுமென்று
நம்பிமோ சேயெழுது மைம்புத் தகத்தினு
 நவின்றதே தபதியுதவும்
வல்லசுத னக்கிரியை தள்ளினு னென்னிலவன்
 வாழுநா ளினில்வழங்கி
வந்ததப் போஸ்தலரின் மூவாறின் மூவேழின்
 மருவிநா லாறின்வசனஞ்
சொல்லிய தியேசுவின் பின்னுமவன் சீடரித்
 தொழினடப் பித்ததென்றே
சூரியனை யங்கையான் மூடலா மாபரன்
 சொன்னதற் கிதுவிரோதம்
அல்லவோ கிரியைபலி யக்கிரம மென்கிரு
 ரவர்வார்த்தை கேட்பதறிவோ
அமலபூ ரணசுத்த சச்சிதா னந்தமய
 மாஞ்சிவனை யறிவதறிவே. (15)

மன்னர்முத லாறிற் சலோமோனுர் கோயிலை
 வளம்படச் செய்துசெருபீம்
மாட்டியொரு பொற்பெட்டி முட்டியத னுட்கர்த்தன்
 வாய்ந்த நாமந்தீட்டியே
பன்னுகற் பலகையந் திரநடுவி னுட்டியே
 பகர்மேள தாளமுதலாந்
புல்லிய முழங்கிடப் பூசைபுரி சரிதையைப்
 பார்த்திலர்கொ லோபடித்துஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னபொரு ளறியா திருந்தார்க ளோமதி
தொலைந்தவர்க ளோகுதர்க்கஞ்
சொல்லியே பிரதிமா ராதனை யடாதென்று
சும்மா புலம்புகின்றார்
அன்னைசெய லறியாது பிறரைப் பழித்தனிக
ரவர்வார்த்தை கேட்பதறிவோ
அமலபூ ரணசுத்த சச்சிதா னந்தமய
மாஞ்சிவனை யறிவதறிவே. (16)

இறைவர்புத் தகமிரண் டிற்செத்த வேலீசா
வென்பொரு சவத்தினுயிரை
ஈந்ததுவு மப்போஸ்த லரின்மூர்க்க புவுலரை
யிடைத்துணிக ளிடமாந்தர்பால்
உறைபேய்க ளோய்களொடு பூதங்க ணீங்கியது
மோதுபே தருவிநிழல்பட்
டொருகோடி நரருய்ந்து விட்டதுவு மவர்மனசி
லுண்மையா மென்றுகண்டால்
மறுசமய மீதிப்ப டிச்சொன்ன சரிதைகளை
மாறுபா டென்றுவீணா
வாயைத் திறப்பதென் நீதிப்ர மாணத்தின்
மார்க்கமிவர் பார்க்கவிலையோ
அறைவதெல் லாங்குறளை முதனூல் வகைச்சொலா
மவர்வார்த்தை கேட்பதறிவோ
அமலபூ ரணசுத்த சச்சிதா னந்தமய
மாஞ்சிவனை யறிவதறிவே (17)

ஓரேழின் மத்தேயு முறைதனிற் பிறர்குற்ற
முரைசெயிற் பிறருமவ்வா
றேதுவா ருன்கண்ணி லுத்திர மிருக்கமற்
றொருவர்கண் ணுற்றதிருணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரே லெனுயேசு சொற்றதுவும் மற்றவும்
பார்த்துமறி வற்றமூடர்
பாசமய நூல்களைத் தெய்வத்தை நடைகளைப்
பாகுலா சாரமதனைச்
சீரார் தவங்களை யிகழ்ந்துபல புத்தகந்
தீட்டியே கூலியாட்கள்
சேர்த்துவைத் தெங்குங் கொடுத்தலைகி றார்தமது
தேசிகன் மொழிமறந்தார்
ஆராகி லும்பக்ஷ பாதஞ்சொல் வோரென்னி
லவர்வார்த்தை கேட்பதறிவோ
அமலபூ ரணசுத்த சச்சிதா னந்தமய
மாஞ்சிவனை யறிவதறிவே. (18)

முழந்தாளி னின்றுகை யேந்தியண் ணாந்துகண்
மூடினாற் பரமண்டலம்
முடுகுமோ யேசுவுங் கைக்கிரியை காற்கிரியை
முன்றள்ளி விடவில்லையோ
உளந்தான் மகாசுத்த மாய்நிற்கி றேமென்னி
லுட்பட்டதைக் கண்டதா
ரொப்பித்த சம்பளத் தான்முழந் தாளூன்று
வோருமுட் பரிசுத்தரோ
களைந்தாசை மூன்றையுந் தவமியற் றூர்முத்தி
காண்பதரி தரிதென்றுனாக்
காமாற்கு மத்தேயு முன்னெழுது வாக்கியங்கள்
கண்டுமிவர் பதரைவாரி
யளந்தார்க ளென்னவீ ணாகவே னலைகிறா
ரவர்வார்த்தை கேட்பதறிவோ
அமலபூ ரணசுத்த சச்சிதா னந்தமய
மாஞ்சிவனை யறிவதறிவே. (19)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருட்டுவழி என்றெழுதி விட்டதவர் தம்முடைய
குலமார்க்க வழியையென்று
கூறலா மாதாமை யேவானை முதன்முதற்
குருடாய்ப் படைத்தவர்களை
மருட்டுவழி யாக்கியபி மானவறி வில்லாமன்
மாற்றுவழி நச்சுமரமும்
வைத்தவழி நாகத்தி லுய்க்கும்வழி சிலநாளில்
வந்தவழி மனுடர்செய்த
இருட்டுவழி முற்கடவுள் சொன்னதை விலக்கும்வழி
யிடையிலே வந்தவழிதான்
எந்தவழி யந்தவழி யேகுரு டெனக்கொள்க
வினியகதி சேரும்வழியாம்
அருட்டுறையின் வழிசற்று மறியாம லிலகிரு
ரவர்வார்த்தை கேட்பதறிவோ
அமலபூ ரணசுத்த சச்சிதா னந்தமய
மாஞ்சிவனை யறிவதறிவே. (20)

மும்மூர்த்தி லக்ஷணமி தென்றச் சடித்துவிடு
முறையவர்கண் முறைமையென்றே
மொழியலா மூர்த்திகளோர் மூவர்களு மவர்கட்கு
முதல்வரா யுறுவரவர்க
டம்மூர்த்தி மரியைக்கு மகவுண்டு பண்ணினது
தச்சனுக் கவளைமுறைமைத்
தாரமா நியமித்த பின்பல்ல வோவதைச்
சந்தேக மென்னலாமோ
எம்மூர்த்தி களினியல்பு மோதுதம் மூர்த்திகளி
னியல்புபோ லாகுமெனவே
எண்ணியோ தாமெழுதி விடுகிரு ரிகழ்கிரு
ரேகநா யககசிவனெனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மூர்த்தி லக்ஷமொ ரெள்ளளவு மறியார்க
ளவர்வார்த்தை கேட்பதறிவோ
அமலபூ ரணசுத்த சச்சிதா னந்தமய
மாஞ்சிவனை யறிவதறிவே (21)

ஓதுவழு நெறியென்ப தேதெ தென மனத்தினுய்த்
துணர்வுளோ ருணரின்மேனுள்
உத்தம பராபரன் திருவுளங் கொண்டருளு
முண்மையாம் பழையநியமம்
ஏதெனி லுமக்குங்க டலைமுறைக் கெல்லா
மியற்று நித்தியகட்டளை
இதுவென்று நியமித்து மோசெயைம் புத்தகத்
தெழுதவவ் வாறுமுன்னோர்
மேதக நடந்தநெறி தனைவிலகி யிடையினார்
வீணே யமைத்தநெறியை
மெய்யென்று நம்பியதி னிற்பதே வழுநெறி
விளக்கமா விதுதெரியுமே
ஆதிநிக மாகமந் னெறிவழு வெனச்சொல்லு
மவர்வார்த்தை கேட்பதறிவோ
அமலபூ ரணசுத்த சச்சிதா னந்தமய
மாஞ்சிவனை யறிவதறிவே. (22)

தேசகலு மூன்றுசை யுடையவர்கண் முத்தியிடை
சேர்வதரி தரிதொட்டகஞ்
சிற்றூசி யின்காதி னுழைவதெளி தென்றேசு
சீடர்க் குரைத்துநீங்கள்
காசுகண் மடிப்பைகண் வேண்டுசம் பாரங்கள்
கட்டிக் சுமக்கவேண்டாங்
கர்த்தனே தருவனென் றருள்செய்த மொழியெலாங்
கழுதையு தசமாக்கிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசுறு மிலேச்சர்வெகு தூரத்தி னின்றுதம்
பெண்டிரையு மைந்தர்களையும்
பேணுபல பொருள்களையு முணவாடை முதலவும்
பிரியாது கொண்டுவந்தே
ஆசில்யே சுவினரு ளடைந்துளோ மென்கிறு
ரவர்வார்த்தை கேட்பதறிவோ
அமலபூ ரணசுத்த சச்சிதா னந்தமய
மாஞ்சிவனை யறிவதறிவே. (23)

தங்கள்சபை யிடைசேர்ந்தி யேசுமத மல்லாது
சற்சமய மில்லையென்று
சாற்றிவே டமுமாற்றி மிகமிக மருட்டியே
தாங்களிட ரொடுகொடுத்த
பொங்குபல நிதியாடை போசனங் கல்விதரு
புத்தகமெலாங் கவர்ந்து
புறமேகி மூழ்கிமெய்ந் நீறணிந்துயர் பத்தர்
போற்சிவா லயமேகியே
மங்கலப் பூசைக்கு வேண்டுதிர வியமீந்து
மறைவாக வேதொழுதுபின்
மறுவேட மோடுதஞ் சபைசேரும் வஞ்சகரை
மகிழ்வொடு தழீஇமிலேச்சர்
அங்கணுயர் கதிமருவு சுத்தாவ ரென்கிறு
ரவர்வார்த்தை கேட்பதறிவோ
அமலபூ ரணசுத்த சச்சிதா னந்தமய
மாஞ்சிவனை யறிவதறிவே. (24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலைப் புஸ்தகங்கள்

## குமாரசுவாமிப்புலவர் இயற்றியன

| | ரூ. ச. |
|---|---|
| தமிழ்ப் புலவர் சரித்திரம் | 5—00 |
| தண்டியலங்காரப் புத்துரை | 3—00 |
| யாப்பருங்கலக்காரிகைப் புத்துரை | 2—50 |
| அகப்பொருள் விளக்கப் புத்துரை | 2—25 |
| தோத்திர மஞ்சரி (கு. மு.) | 1—25 |
| முருகன் திருப்புகழ்மாலை (மு. க.) | 1—00 |
| சிசுபால சரித்திரம் | 1—00 |
| முத்துக்குமாரகவிராசர் பிரபந்தத்திரட்டு | 1—00 |
| இரகுவமிச சரிதாமிர்தம் | —75 |
| வினைப்பகுபத விளக்கம் | —60 |
| மேகதூதக் காரிகை | —60 |
| இதோபதேசம் | —60 |
| இராமோதந்தம் | —60 |
| சூடாமணி நிகண்டு 1-வது பதப்பொருள் | —50 |
| ,, ,, 2-வது ,, | —50 |
| சாணக்கிய நீதிவெண்பா | —20 |
| மறைசையந்தாதி (அரும்பதப்பொருள்) | —25 |
| கலைசைச்சிலேடை வெண்பா ,, | —25 |
| ஞானக்கும்மி யேசுமதபரிகாரம் | —25 |
| கண்ணகி கதை | —25 |
| மாவைப் பதிகம் | —12 |
| ஐயனார் ஊஞ்சல் | —10 |

(கிடைக்குமிடம் :) புலவரகம்:

மயிலணி, சுன்னுகம் P. O.

இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org